குறிக்கோள்

பாடம் – 1

## பெரியார் வாழ்வும் பணியும்

### 1.1 முன்னுரை

இந்தியச் சீர்திருத்த இயக்க வரலாற்றில் தந்தை பெரியாருக்கு ஒரு தனியிடம் உண்டு. தமிழரின் தன்மான உணர்வுக்கும் சுயமரியாதை வளர்ச்சிக்கும் அயராது பாடுபட்ட மாமனிதர் பெரியார். மக்கள் மான உணர்ச்சிக்கும் சமுதாய வளர்ச்சிக்கும் தடையாக இருந்தவற்றைப் புறந்தள்ளிச் சாடியவர். தம் கருத்துகளை ஆழவும் அகலவும் விதைத்தவர். உறங்கிக் கொண்டிருந்த மக்களை விழிப்புணர்வு பெறச் செய்து, அறிவியல் பாதையில் கூட்டிச் சென்றவர். அவரது பகுத்தறிவுச் சிந்தனையை மனிதகுலத்திற்கு வழிகாட்டும் கைவிளக்கு என்றுதான் சொல்ல வேண்டும். இம்முதல் இயலில் பெரியார் ஈ.வெ.இராவின் வாழ்க்கை வரலாற்றுச் செய்திகள் இடம் பெறுகின்றன.

### 1.2 நோக்கங்கள்

- பெரியாரின் வாழ்க்கை வரலாற்றை விளக்குதல்.
- பெரியார் சிறுவயது முதலே சமுதாய ஏற்றத் தாழ்வுகளை ஏற்றுக்கொள்ளவில்லை என்பதைப் புரிந்து கொள்ளுதல்.
- 'சுயமரியாதை' என்ற கருத்துக்கான பொருளை அறிதல்.
- வாழ்நாள் முழுவதும் ஒரு போராளியாக விளங்கிக் காங்கிரஸ், சுயமரியாதை இயக்கம், திராவிடர் கழகம் ஆகியவற்றில் முன்னின்று போராடிய திறத்தைப் பாராட்டுதல்.
- கருத்துகளைப் பரப்புவதிலும் ஏடுகளை நடத்துவதிலும் ஈ.வெ.இராவுக்கு இருந்த பற்றுறுதியை எடுத்துக்காட்டுதல்.
- பெரியாரின் இந்தி எதிர்ப்புப் பங்களிப்பை விளக்குதல்.
- பார்ப்பனர் அல்லாதாரின் முன்னேற்றத்திற்கான அவருடைய செயல்பாடுகளைப் பட்டியலிடுதல்.
- ஈ.வெ.இரா. பயணம் மேற்கொண்ட அயல்நாடுகளைப் பட்டியலிடுதல்.
- திராவிடர் கழகத்தின் தோற்றத்தினையும் கொள்கைகளையும் பற்றி விளக்குதல்.

### பாட அமைப்பு


1.1 முன்னுரை

1.2 நோக்கங்கள்

1.3 பாட அறிமுகம்

1.4 பாடப் பிரிவுகள்

1.4.1 ஈ.வெ.இராவின் தோற்றம்

1.4.2 பொது வாழ்வு

1.4.3 அயலகப் பயணம்

1.4.4 இந்தி எதிர்ப்புப் போர்

1.4.5 திராவிடர் கழகம் தோற்றம்

1.4.6 வருண ஒழிப்பு இறுதிப் போராட்டம்

1.5 பாடத் தொகுப்புரை

1.6 முக்கியச் சொற்கள்

1.7 தன்மதிப்பீட்டு விடைகள்

1.8 மாதிரி வினாக்கள்

### 1.3 பாட அறிமுகம்

'பெரியார் வாழ்வும் பணியும்' என்னும் இம்முதல் இயலில், பெரியாரின் தோற்றம், பள்ளிக்கல்வி, திருமண வாழ்க்கை, கைவல்ய சாமியாருடன் கொண்டிருந்த உறவு, பொது வாழ்க்கையில் ஈடுபாடு கொண்டு ஆற்றிய அரும்பணிகள், அவர் மேற்கொண்ட அயல்நாட்டுப் பயணங்கள், இந்தி மற்றும் பார்ப்பனர் எதிர்ப்புணர்வு, வருண ஒழிப்புக்கான போராட்டங்கள் அனையவை விளக்கமாக எடுத்துரைக்கப் பெற்றுள்ளன.

### 1.4 பாடப் பிரிவுகள்

#### 1.4.1 ஈ.வெ.இரா. வின் தோற்றம்

தமிழகத்தில் கொங்குநாட்டுப் பகுதியில் காவிரியின் தென்கரையில் அமைந்துள்ள ஊர் ஈரோடு ஆகும். அப்பகுதியிலுள்ள நிலங்களின் தன்மைக்கேற்பப் பெரும்பாலான மக்கள் மஞ்சள், நிலக்கடலை, மிளகாய் முதலான பணப்பயிர்களிடுவதில் ஈடுபட்டிருந்தனர். மற்ற புன்செய்ப் பயிர்களும், நன்செய்ப் பயிர்களும் செழுமையாக விளைந்தன; இன்றும் விளைகின்றன. எனவே ஈரோடு ஒரு பெரிய வணிக நகரமாக நீண்டகாலமாகத் திகழ்கிறது.

ஈரோட்டில் 17.09.1879-இல் வெங்கட்ட நாயக்கர் – சின்னத்தாயம்மாள் ஆகியோரின் மகனாகப் பிறந்தார். ஈ.வெ.இராமசாமி அப்பெற்றோருக்கு ஐந்தாவது குழந்தையாவார். இவருக்கு ஈ.வெ.கிருஷ்ணசாமி என்னும் தமையனாரும், கண்ணம்மாள், பொன்னுத்தாய் என்னும் தங்கையரும் உடன் பிறந்தோர் ஆவர்.

ஈ.வெ.இராவின் முன்னோர் கன்னட நாட்டிலிருந்து தமிழகத்தில் கொங்குப் பகுதியில் குடியேறினர் என அறிகிறோம். என்ன காரணத்தினால், எப்போது இங்குக் குடியேறினர் என்பது தெளிவாகத் தெரியவில்லை. ஆயினும் வாய்மொழியாகத் தன் நெருங்கிய உறவினர்களிடம் (ஈரோடு ஈ.வெ.கி. செல்வராஜ், சேலம் தாதம்பட்டி ம. இராஜு ஆகியோரிடம் வே. ஆனைமுத்து நேர்காணலில் இருந்து) ஈ.வெ.இரா. சொல்லிய செய்தியின் படி, அவருடைய முன்னோர்கள் மைசூர் சிற்றரசரின் அரண்மனையில் ஏதோ ஒருவகைப் பணியிலிருந்து அதன் பிறகு தமிழகத்துக்கு வந்திருக்க வேண்டும் என்று அறிய முடிகிறது. இது மேலும் ஆய்வுக்குரியது.

ஈ.வெ. இராவின் தந்தை வெங்கட்ட நாயக்கர் கூலி வேலை செய்பவராக இருந்த போது, சேலம் தாதம்பட்டியில் பெரிய செல்வந்தர் குடும்பத்தில் பிறந்த சின்னத்தாயம்மை என்று அழைக்கப்படும் முத்தம்மாளை மணம் புரிந்து கொண்டார். அப்போது வெங்கட்ட நாயக்கரின் வயது 18 சின்னத்தாயம்மையின் வயது 12.

அச்சமயம் ஈரோட்டில் காவிரியின் குறுக்கே தொடர் வண்டி இருப்புப்பாதை போடுவதற்காகப் பாலம் கட்டும் வேலை நடைபெற்றது. வெங்கட்ட நாயக்கர் அங்குக் கல் தச்சராகப் பணி புரிந்தார். அவருடைய துணைவியாகிய சின்னத்தாய் கல் சுமந்து வரும் கூலி வேலை செய்தார். அந்தப் பாலம் 1860இல் கட்டி முடிக்கப்பட்டது. அதன் பின்னர் சொந்தமாக மாட்டு வண்டி வாங்கி வாடகைக்கு வண்டி ஓட்டும் தொழிலை வெங்கட்ட நாயக்கர் மேற்கொண்டார்.

சின்னத்தாயம்மையார் ஈரோட்டில் தட்டுக்கடை வைத்து மளிகை வணிகம் மேற்கொண்டார். அத்துடன் குடும்பங்களின் அன்றாடப் பயன்பாட்டுக்கு வேண்டிய

அரிசி, துவரை, உளுந்து, [illegible]களைப் முதலானவற்றைப் பக்குவப்படு... அவற்றை விற்றுச் சிறுகச் சிறுகப் பொருள் சேர்த்தார். தட்டுக்கடை என்பது நாள... மண்டிக்கடை ஆகிவிட்டது.

மண்டிக்கடை தொடங்கப்பட்ட நாள்முதல் செல்வம் பெருகலாயி... நம்பிக்கையின் பேரில் அக்கம்பக்கத்தார் வெங்கட்ட நாயக்கரிடம் கொடுத்து ... பணமும் வணிகத்தைப் பெருக்குவதற்கு அவருக்கு முதலீடு போல் பயன்பட்... 1875இல் வெங்கட்ட நாயக்கர் வீடு பெரிய பணக்காரர் வீடாகவே ஆகிவிட்டது. செ... பெருகப் பெருக அவர்களுக்குப் பக்தியும் பெருகிற்று. எப்போதும் சாமியார்... பாகவதர்கள், பண்டிதர்கள் அண்டியிருக்கும் வீடாக வெங்கட்ட நாயக்கர் இ... விளங்கியது.

## 2. பள்ளிக்கல்வி

இதற்கிடையில் தன் ஆறாம் வயதில் திண்ணைப் பள்ளியில் சேர்க்கப்பட்... ஈ.வெ.இரா. தன்னுடைய சின்ன பாட்டியார் அவர்களிடம் (கைம்பெண்... தத்துப்பிள்ளையாக வாய்மொழி மூலம் கொடுக்கப்பட்டார். ஈ.வெ.இரா. படி... திண்ணைப் பள்ளியைச் சுற்றிலும் அக்காலத்தில் புழங்கக்கூடாத சாதியர்கள் என்று கருதப்பட்ட வாணியர் வேதக்காரர் மற்றும் இசுலாமியர்களின் வீடுகளே இருந்தன.

ஈ.வெ.இரா. படித்த திண்ணைப் பள்ளியின் ஆசிரியர் ஓதுவார் சாதியை... சார்ந்தவர். தாகம் எடுக்கும் போது அவர் வீட்டில்தான் சிறுவன் ஈ.வெ.இரா. தண்ணீர் அருந்த வேண்டும். அவர் தண்ணீர் குடித்த குவளையை ஆசிரியரின் மகள் கழு... எடுத்துக் கொண்டு உள்ளே செல்வாள். அச்செயல் அவ்வீட்டார் தன்னைத் தாழ்ந்த மனிதனாகக் கருதுவதாக ஈ.வெ.இரா.வை எண்ணச் செய்தது. அன்றையச் சமூகத்தில் நிலவிய இழிநிலையின் தாக்கமாக அவர் மனத்தில் விழுந்த முதலாவது கீறல் இ... அப்போது அவருடைய வயது ஏழு.

அந்த இழிவிலிருந்து தப்பித்துக் கொள்ள வேண்டி, ஆசிரியருக்கும் தெரியாமல் பெற்றோர் அறிவுரையையும் மீறி, புழங்கக்கூடாத சாதியர்கள் வீட்டிலும் மற்றும் இசுலாமியர்கள் வீட்டிலும் தண்ணீர் குடிப்பது, தின்பண்டங்களை உண்பது என்று தொடங்கினார். இது பெற்றோருக்கும் தெரிந்து விட்டது. ஆயினும் அவரை வளர்த்த சிறிய பாட்டியாலோ, பெற்றோராலோ அவரைக் கட்டுப்படுத்த முடியவில்லை. கட்டுக்கடங்காத பிள்ளையாக மற்றப் பிள்ளைகளுடன் சேர்ந்து கண்டபடி திரியலானார். கண்ணறவு கழித்தல், கழிப்புக் கழித்தல் செய்வோர் தெருக்களில் எறியும் பண்டங்களைப் பொறுக்கி எடுத்துத் துடைத்தும் துடைக்காமலும் மற்ற சிறுவர்களோடு சேர்ந்து தின்னத் தொடங்கினார். இப்படிக் கட்டு மீறிய நிலையில் முரட்டுப் பிள்ளையாகத் திரிந்த அவருக்குப் பெற்றோர் கால் விலங்கிட்டனர். ஒரு சமயம் 15 நாள்கள் இரண்டு கால்களிலும் பெற்றோர் விலங்குக் கட்டை போட்டு விட்டனர். அப்போதும் இரண்டு விலங்குக் கட்டைகளையும் தோளில் போட்டுக் கொண்டு பிள்ளைகளோடு சுற்றித் திரியலானார். இந்நிலையில் தங்கள் பாதுகாப்பில் வைத்துக் கொள்ள வேண்டி ஈ.வெ.இராவைத் தங்கள் வீட்டுக்கே 1887இல் பெற்றோர் அழைத்து வந்தனர். தத்துக் கொடுக்கும் எண்ணத்தையும் கைவிட்டனர். கிறித்துவ மிஷனரியினர் நடத்திய அரசினால் அங்கீரிக்கப்பட்ட பள்ளியில் சேர்த்துப் படிக்க வைத்தனர். அங்கு இரண்டாண்டுகளே படித்தார். படிப்பைக் காட்டிலும் பிள்ளைகளோடு குறும்பு செய்வதிலும், பிள்ளைகளை அடிப்பதிலுமே அவருக்கு அதிக நாட்டம் இருந்தது. இருப்பினும் அரசு நடத்திய நான்காம் வகுப்புத் தேர்வை எழுதி அதில் வெற்றி பெற்றார். அந்த ஆண்டைய அரசுப் பதிவு இதழில் (Gazette) தேர்ச்சி பெற்றவர்களின் பெயர்ப் பட்டியல் வெளி வந்தது. அத்துடன் அவருடைய பள்ளிப் படிப்பு முடிந்தது.

இது பற்றி அவரே கூறுகிறார் : "நான் பள்ளியில் படித்த காலம் மிகச் சொற்ப காலமேயாகும். திண்ணைப் பள்ளிக் கூடத்தில் 3 வருடமும் (ஸ்கூல்) பள்ளிக்கூடம் என்னும் ஆங்கிலமுறைப் பள்ளிக்கூடத்தில் 2 வருடமுந்தான் படித்தவன். எனக்குப் படிப்பே வராது என்று என் பெற்றோர் முடிவுகட்டிவிட்டதாகவும், நான் மிகவும் துடுக்கான பிள்ளையாய் இருந்ததாகவும், ஆதலால் என்னைப் பள்ளியில் பகலெல்லாம் பிடித்து வைத்திருந்து இரவில் வீட்டிற்கனுப்பினால் போதுமென்று கருதியதாகவும் சொன்னார்கள்." எனத் தன்னைப் பற்றி ஈ.வெ.இரா. எழுதியுள்ளார். ("தமிழர் தலைவர்" பக்கம் 2, 3 (1960 பதிப்பு) சாமி சிதம்பரனார்.)

3. திருமணம்

மண்டி வணிகம் பெருகிய நிலையில் தன் பதினோராம் வயதில் மண்டிக்கடை வேலைக்கு ஈ.வெ.இரா. அழைக்கப்பட்டார். அது தரகு மண்டிக்கடை. 12ஆவது வயதிலேயே கடைக்கு வரும் மஞ்சள், மிளகாய் முதலிய சரக்குகளை ஏலங்கூறுவதும், இரயிலுக்கு அனுப்பப்படும் மூட்டைகளுக்கு விலாசம் போடுவதும் அவருடைய வேலையாகும். ஒரு செல்வந்தரின் பிள்ளையாக இருந்து கொண்டு அவர் ஏலங்கூறும் பண்டங்களைக் கூட்டத்தில் உள்ளவர்கள் அதிக விலைக்குக் கேட்கும்படிச் செய்து விடுவார்; கடைக்கு வியாபாரம் செய்ய வருபவர்களை நழுவ விடமாட்டார். வாணிபம் செய்வதில் மிகவும் கெட்டிக்காரர் என்று பெயரெடுத்து விட்டார் ஈ.வெ.இரா.

தன் வீட்டில் இருக்கும்போதெல்லாம் அங்கு வரும் சாமியார்கள், பாகவதர்கள், பண்டிதர்களிடம் கேள்விகளை எழுப்பி ஈ.வெ.இரா. வாக்குவாதம் செய்வார். புராணங்கள், சாஸ்திரங்கள் இவற்றிலிருந்து சொல்லப்படும் கருத்துகளை மறுத்துப் பேசுவார். இப்பழக்கம் காரணமாக, பழமைக் கருத்துகளை மறுத்துப் பேசுபவராக 1890க்கும் 1903க்கும் இடையில் அவர் உருவாகி விட்டார்.

1893இல் ஈ.வெ.இராவுக்கு வயது 19. கட்டிளங்காளையாக விளங்கிய அவர் தன் வயதையொத்த இளைஞர்களுடன் சேர்ந்து கொண்டு கட்டுப்பாடற்றுத் தன்னிச்சையாகத் திரியலானார். இதனை அறிந்த பெற்றோர் அவருக்குத் திருமணம் முடித்து வைக்க விரும்பினர். தம் குடும்பத்தை ஒத்த செல்வக் குடும்பங்களில் பெண் தேடினர். ஆயினும் தான் சிந்தனையில் பதித்திருந்தவாறே சேலம் தாதம்பட்டியைச் சார்ந்த உறவினர் வீட்டுப் பெண்ணான நாகம்மாளையே மணப்பேன் என்று ஈ.வெ.இரா. பிடிவாதமாகக் கூறிவிட்டார்.

நாகம்மாள் ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்தவர். அவருடைய பெற்றோர் வயதான இன்னொருவருக்கு மூன்றாந்தாரமாக நாகம்மாளை மணம் முடிக்க ஏற்பாடு செய்து கொண்டிருந்தனர். அவர் அத்திருமணத்திற்கு ஒப்ப முடியாது என்று மறுதலித்ததுடன், "மணந்தால் ஈரோடு இராமசாமியை மணப்பேன்; இன்றேல் தற்கொலை செய்து கொண்டு இறப்பேன்" என்று உறுதியாகக் கூறினார். அப்போது அவருக்கு வயது 13. திருமணத்திற்குப் பின்னர், நாகம்மாளும் இராமசாமியும் ஈருடல் ஒருயிராய் இணைந்து ஒத்த கருத்தினராய் இறுதிவரை வாழ்ந்தனர்.

திருமணமான இரண்டு ஆண்டுகளில் இவர்களுக்கு ஒரு பெண் குழந்தை பிறந்தது. அது ஐந்து மாதங்களில் இறந்தது. அதன் பின்னர் இவர்களுக்குக் குழந்தையே இல்லை.

ஈ.வெ. இரா. புலால் உணவில் விருப்பம் உள்ளவர். நோன்பு நாளாக இருந்தாலும் அன்றும் புலால் உணவு வேண்டும் என்று அடம் பிடிப்பார். நாகம்மாள் மாமனார் மாமியார் மனங்கோணாதிருக்க வேண்டிக் குளித்துவிட்டுத்தான் சமையல் அறைக்குள் போவார். நாகம்மாள் இல்லாத நேரத்தில் எலும்புத்துண்டைச் சோற்றில் புதைத்து வைத்து விட்டு ஈ.வெ.இரா. போய்விடுவார். நாகம்மாள் குளித்துவிட்டு உணவுண்ணச் சோற்றை

எடுக்கும் போது எலும்புத் துண்டு தலை நீட்டும். அது தன் கணவரின் குறும்புத் தனம் என அறிந்து வெளியில் சொல்லாமல் உணவுண்பார்.

ஈ.வெ.இரா. திடுமென விருந்தினரை அழைத்து வந்துவிடுவார். அனைவருக்கும் அட்டியின்றி உணவு சமைத்து உடனே படைப்பார் நாகம்மாள். நாகம்மாளால் தன் பிள்ளைகள்போல் கருதி உணவளிக்கப்பட்ட சுயமரியாதைத் தொண்டர்கள் பலர் ஆவர்.

ஈ.வெ.இரா. இரவு எந்நேரம் வீட்டுக்கு வந்தாலும் நாகம்மாள் தான் உணவு பரிமாற வேண்டும். இதை மகிழ்ச்சியுடன் செய்தவர் நாகம்மாள். திருவிழாக் காலங்களில் நாகம்மாள் கோயிலுக்குச் செல்வது உண்டு. இதைத் தடுத்து நிறுத்திட விரும்பிய ஈ.வெ.இரா. ஓர் உத்தியைக் கையாண்டார். ஒரு விழா நாளில் நாகம்மாள் சென்ற கோயிலுக்குத் தானும் அழகான உடையுடன் சென்றார். நாகம்மாளுக்குத் தெரியாமல் ஓரிடத்தில் நின்று கொண்டு, தன் கூட்டாளிகளுக்கு நாகம்மாளை அடையாளங்காட்டி, "இவள் யாரோ புதுத் தாசி, நம் ஊருக்கு வந்திருக்கிறாள்; இவளை நாம் வசப்படுத்த வேண்டும்" என்று கூறித் தூண்டிவிட்டார். அவர்களும் நாகம்மாளைப் பார்த்துக் கிண்டல் செய்தனர். நாகம்மாளின் உடலும் நெஞ்சமும் நடுங்கின; அவ்விடத்திலிருந்து தப்பித்து வீடு சேர்ந்தார். அன்று முதல் கோவிலுக்குப் போவதை நிறுத்திவிட்டார்.

ஒரு நாள் இரவில், தாலியைக் கழற்றித் தரும்படி நாகம்மாளைக் கேட்டார்; அவர் மறுத்தார். 'நானே பக்கத்திலிருக்கும் போது தாலி எதற்கு? என்று கேட்டு வாங்கிக் கொண்டார்; அதைத் தன் சட்டைப் பையில் போட்டுக் கொண்டு வெளியே போய்விட்டார். தாலி இல்லாததைப் பார்த்த பெண்டிர் கிண்டல் செய்தனர். நாகம்மாள் சமாளித்துக் கொண்டார்.

நாகம்மாளுக்குப் போதிய படிப்பறிவு இல்லை. கடைசிக் காலத்தில் கையெழுத்துப் போட மட்டும் கற்றுக் கொண்டிருந்தார். ஆயினும் அவர் சீர்திருத்தக் கொள்கைகளைப் பற்றி நன்றாக விவாதிக்கும் திறமையைப் பெற்றிருந்தார்; சிறந்த அறிவாளியாக விளங்கினார். ஈ.வெ.இரா. வின் பொதுப்பணிகள் எல்லாவற்றிலும் அவர் பங்கெடுத்துக் கொண்டார்.

ஈ.வெ.இரா. ஈரோட்டில் மேற்கொண்ட கள்ளுக்கடை மறியலில் நாகம்மாள் பங்கேற்றார். அவருடன் ஈ.வெ.இராவின் தங்கை கண்ணம்மாளும் பங்கேற்றார்.

கள்ளுக்கடை மறியல் காரணமாக பிரிட்டிஷ் அரசாங்கத்துக்கு வருமானம் குறைந்தது. அதனால் சர்.சி.சங்கரன் நாயர் மூலம் காந்தியாருக்கு நெருக்குதல் தந்து கள்ளுக்கடை மறியல் கிளர்ச்சியை நிறுத்த அரசினர் முயன்றனர். காந்தியாரிடம் இது குறித்துப் பேசிய சங்கரன் நாயரிடம், "கள்ளுக்கடை மறியலை நிறுத்துவது என் கையில் இல்லை. அது ஈரோட்டில் உள்ள இரண்டு பெண்கள் கையில்தான் உள்ளது" என 1922 சனவரியில் பம்பாயில் காந்தியார் கூறினார். இது நாகம்மாளின் பொது வாழ்வுக்குக் கிடைத்தப் பெரிய பாராட்டு ஆகும்.

1924இல் வைக்கம் மகாதேவர் கோயிலைச் சுற்றிலும் உள்ள பொதுச் சாலைகளில் தீண்டப்படாதார் நடக்கக்கூடாது என்கிற கொடுமையை எதிர்த்து நடந்த கிளர்ச்சியில் ஈ.வெ.இரா. பெரும்பங்கு ஏற்றார். அவருக்குத் துணையாக நாகம்மாளும், கண்ணம்மாளும் வைக்கம் கிளர்ச்சியில் பங்கேற்றனர். ஈ.வெ.இரா. அக்கிளர்ச்சியில் சிறைப்பட்ட நேரத்தில், நாகம்மாள் கேரளப் பகுதியில் சிற்றூர்களில் பரப்புரை செய்து பெண்களைத் திரட்டி வைக்கம் தெருக்களில் மறியல் கிளர்ச்சிக்குத் தலைமையேற்று நடத்தினார்; சிறைத் தண்டனையும் பெற்றார்.

1929இல், மலேசியா சுற்றுப்பயணத்தின்போது ஈ.வெ.இரா. பினாங்கு, ஈப்போ, ஜோகூர்பார், பத்து பகார், மலாக்கா, தம்பின், கோலப்பிறை, கோலாகுபு, தஞ்சமாலிம், சுங்கை குரூட் முதலான பல இடங்களில் பொதுக் கூட்டங்களில் உரையாற்றினார்.

ஒவ்வொரு கூட்டத்திற்கும் ஆயிரக் கணக்கான மக்கள் திரண்டு வந்து அவருடைய உரையைக் கேட்டனர். கூட்டம் முடிந்த பிறகு பலர் அவரை நேரில் கண்டு உரையாடினர்.

ஒருநாள் மாலை ஒரு சிற்றூரில் நாற்காலியில் தோழர்களுடன் அமர்ந்து ஈ.வெ.இரா. உரையாடிக் கொண்டிருந்தார்; நாகம்மாளும் அருகிலிருந்தார். ஈ.வெ.இரா. வை ஒரு சாமியார் என்றே கருதிய 40 வயதுள்ள ஒரு பெண், 20 வயதுள்ள தன் மகளுடன் அவரைக் கண்டு, "இவள் என் மகள். இவளுக்குக் கலியாணமாகி 4 வருடங்கள் ஆகிவிட்டது. இதுவரையில் பிள்ளை இல்லை. நீங்கள் இவளுக்குப் பிள்ளைவரம் தரவேண்டும்," என்று வெகுளித்தனமாகக் கோரினார். இதைக் கேட்டதும் அனைவரும் நகைத்தனர். ஈ.வெ.இரா. அந்த அம்மையாரிடம், "அம்மா! நான் சாமியாரல்ல; வெறும் ஆசாமிதான். எனக்கே 30 ஆண்டுகளாகப் பிள்ளை இல்லை. நான் எப்படிப் பிள்ளை வரம் தர முடியும்? என்னை நம்பாவிட்டால் இந்த அம்மாளைக் கேட்டுப்பார்!" என்று நாகம்மாளைச் சுட்டிக் காட்டினார். அப்போதும் அந்த அம்மாள் நம்பவில்லை. எனவே அவருக்கு மகிழ்ச்சி உண்டாகும்படி, "சரி! உன் மகளுக்கு இரண்டு மூன்று ஆண்டுகள் கழித்து நல்ல ஆண் குழந்தை பிறக்கும். கவலை வேண்டாம்" என்று கூறித் தப்பித்துக் கொண்டார். உடனிருந்த அனைவரும் ஈ.வெ.இரா.வைப் பரிகாசம் செய்தனர்.

நாகம்மாள் 1973-இல் மறைந்த பொழுது ஈ.வெ.இரா. எழுதிய இரங்கல் செய்தி கல்நெஞ்சம் படைத்தவரையும் உருக்கிவிடும். நாகம்மாளிடம் ஈ.வெ.இரா. கொண்டிருந்த கொள்ளை அன்பையும், நாகம்மாள் புரிந்த தொண்டின் அருமையையும் அது எடுத்துக் காட்டும்.

ஈ.வெ.இரா.வும் கைவல்ய சாமியாரும்

1900-முதல் பார்ப்பனர் எதிர்ப்பு உணர்வு ஈ.வெ.இரா.விடம் ஏற்பட்டு விட்டது.

1902-வாக்கில் நெருஞ்சிப்பேட்டை சாமியார் என்பவர் ஈரோட்டுக்கு வந்து எல்லையர் சத்திரத்தில் தங்கி இருந்தார். அங்கு நடந்த சமாராதனையையொட்டிப் பார்ப்பனர்களுக்கு மிகப் பெரிய விருந்து படைக்கப்பட்டது. பார்ப்பனர்கள் சாப்பிட்டுக் கொண்டிருந்த நேரத்தில் அந்தச் சாமியாரின் தம்பியானவர் கடனுக்காக வந்திருந்த பிடிவாரண்டிலிருந்து தப்புவதற்காக எல்லையர் சத்திரத்திற்குள் ஓடி ஒளிந்தார். அவரைத் துரத்திச் சென்று பார்ப்பனர் சாப்பிடுமிடத்தில் கண்டு பிடித்து அரசு சேவகனிடம் ஒப்படைத்தார், ஈ.வெ.இரா. தாங்கள் சாப்பிடுமிடத்தில் ஈ.வெ.இரா நுழைந்ததால் உணவு தீட்டுப்பட்டுவிட்டதாகக் கூறி, அனைத்துப் பார்ப்பனர்களும், சமாராதனைக்கு ஏற்பாடு செய்தவர்களும் வெங்கட்ட நாயக்கரிடமும் காவல் துறையினரிடமும் முறையிட்டனர். பார்ப்பனர்களும் சமாராதனை நடத்திய செட்டியார்களும் வந்து தன் மகன் பேரில் குறை சொன்னதைக் கேட்டவுடன், பரம பக்தரான வெங்கட்ட நாயக்கர் கடுஞ்சினங்கொண்டு தன் செருப்புகளிலொன்றை எடுத்து, வாயிலிருந்த வெற்றிலைப் பாக்கு எச்சிலை முகத்தில் துப்பி ஈ.வெ.இராவின் குடுமியைப் பிடித்துக் கொண்டு தலை, முகம், முதுகு என்று பாராமல் ஏழெட்டு அடிகள் போட்டு வாயில் வந்தபடி திட்டினார். பார்ப்பனர், பார்ப்பனரல்லாதாரைப் பக்தியின் பேரால் சுரண்டியுண்பதைப் பார்ப்பனரல்லாதார் புரிந்து கொள்ளாதது ஒரு இழிநிலை என்று கருதும் வாய்ப்பு இதனால் ஈ.வெ.இராவுக்கு ஏற்பட்டது.

இந்துமத இதிகாச புராணங்களை நன்கு கற்றறிந்தவரும், 'கைவல்ய நவநீதம்' என்னும் சைவ சித்தாந்த நூலைத் துறைபோக உணர்ந்தவருமான கைவல்ய சாமியாரின் நட்பு 1903-இல் ஈ.வெ.இராவுக்குக் கிட்டிற்று. அவர் மூலம் புராண, இதிகாசக் கருத்துகளை மேலும் தெளிவாகத் தெரிந்து கொள்ள வாய்ப்பு ஏற்பட்டது.

1905–வாக்கில் திருச்செங்கோடு அடுத்த இளம்பள்ளி குறுநில மன்னர் வீட்டில் நடந்த திருமணத்திற்கு இவர்கள் இருவரும் சென்றிருந்தனர். பந்தியில் அமர்ந்து உண்ணும்போது ஈ.வெ.இரா குடிநீர் கேட்டார். நீரூற்றும் பார்ப்பனர் ஈ.வெ.இரா, ஏற்கனவே நீர் குடித்த குவளையை எடுத்து அதில் நீரை ஊற்றிக் கொடுத்தார். அதைக் கண்ட சமையல்காரப் பார்ப்பனர், "சூத்திரன் தொட்ட டம்ளரை நீ ஏண்டா எடுத்தாய்?" என்று கூறிக் கடிந்து கொண்டார். "சூத்திரன்" என்ற சொல்லைக் கேட்ட கைவல்ய சாமியார் கடுஞ்சினங்கொண்டெழுந்து சோற்றுக் கையாலேயே சமையற்காரப் பார்ப்பனரின் தாடையில் "ஏண்டா சூத்திரன் என்று கூறினாய்?" என்று கேட்டுக்கொண்டே ஓங்கி அறைந்தார்.

சூத்திரன் என்று கருதப்படும் இழிவை எதிர்த்துப் போராட வேண்டும் என்கிற உணர்வு ஈ.வெ.இரா. நெஞ்சில் இடம் கொள்ள இந்நிகழ்ச்சியும் ஒரு தூண்டுகோலாய் அமைந்தது.

அந்தக் காலத்தில் ஈரோட்டில் வழக்கறிஞர்களாக இருந்தவர்கள் அனைவரும் பார்ப்பனர்களே. அங்கு அரசு அதிகாரிகளாக நாணயமான பார்ப்பனர் அல்லாதார் பலர் இருந்தனர். அவர்களில் சிலர் ஈ.வெ.இரா. வின் வீட்டில் குடியிருந்தனர். ஈ.வெ.இரா. வாசகசாலை, டென்னிஸ் கோர்ட் ஆகியவற்றின் செயலாளராக அப்போது இருந்தார். நாள்தோறும் அவ்விடங்களில் சந்திக்கிற பார்ப்பனர் அல்லாத அதிகாரிகளும் ஈ.வெ.இரா. வும் பார்ப்பன அதிகாரிகளும் வழக்கறிஞர்களும் செய்யும் அக்கிரமங்கள், அடிக்கும் கொட்டங்கள் பற்றி உணர்ச்சி ததும்பப் பேசுவார்கள். பார்ப்பனர்கள் ஒன்றுகூடும் போதும் இவர்களைப் பற்றி அவர்கள் பேசுவார்கள். பார்ப்பனர் அல்லாதாரின் பேரில் அவருக்கு அக்கறை ஏற்படுவதற்கு இதுவும் ஒரு தூண்டுகோலாயிற்று.

### 1.4.2 பொது வாழ்வு

ஈ.வெ. இராமசாமி இளமைப்பருவத்திலேயே சாதி, மதம், ஏழை, பணக்காரன் என்ற வேறுபாடு கருதாமல் நன்றாகப் பழகினார். அவருடன் எப்போதும் பத்துப்பேர் உடனிருப்பர். ஈரோட்டில் எந்த வகுப்பார் வீட்டில் எந்த வித நன்மை, தீமை நிகழ்ச்சி நடந்தாலும் – அவர்கள் அழைத்தாலும் அழைக்காவிட்டாலும் தன் குழுவினருடன் அங்குச் சென்று விடுவார்; தாமே முன்னின்று எல்லாக் காரியங்களையும் கவனிப்பார். இந்தத் தன்மையினால் எல்லோரும் அவரை நண்பராகக் கருதினர். தனிப்பட்ட குடும்பச் சிக்கல்கள் முதற்கொண்டு, தீராமல் நீடிக்கும் நீதிமன்ற வழக்குகள் வரையில் அவரிடம் வரும். அவருடைய தீர்ப்புக்கு அனைவரும் கட்டுப்படுவர். ஏனெனில் அவர் சரியான தீர்ப்பையே வழங்குவார்.

ஒரு சமயம் ஈரோட்டில் 'பிளேக்' நோய் பரவியது; பலர் மடிந்தனர். இதற்கு அஞ்சிய செல்வந்தர்கள் ஊரை விட்டே ஓடினர்; ஏழைகள் அச்சத்துடனேயே வாழ்ந்தனர். இறந்தவர்களின் உடலைத் தொடவே எல்லோரும் அஞ்சினர். ஆனால் அச்சம் என்பதையே அறியாத ஈ.வெ.இரா. தன் தோழர்களின் உதவியுடன் பல பிணங்களைத் தூக்கிச் சென்று எரிக்கச் செய்தார். இதனால் ஈரோட்டு மக்களால் அவர் புகழப்பட்டார்.

**காங்கிரசில் ஈ.வெ.இரா.**

ஈ.வெ.இரா. 1907–இல் இந்திய காங்கிரசில் நாட்டங்கொண்டார். 1914–முதல் அமிர்தசரஸ், கல்கத்தா முதலிய தூர இடங்களில் நடந்த அனைத்திந்திய காங்கிரஸ் மாநாடுகளுக்கு அவர் சென்று வந்தார். சிறந்த வணிகராகவும், இந்திய தேசிய காங்கிரசில் ஆர்வமுள்ளவராகவும் இருந்த அவர் ஈரோடு நகரத்திலும், கோவை மாவட்டத்திலும் இருந்த பல பொது நிறுவனங்களுக்குத் தலைவராகவும், செயலாளராகவும் விளங்கி வந்தார். 1917–இல் ஈரோடு நகர மன்றத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அதே சமயம் சேலத்தில் சி. இராச கோபாலாச்சாரி நகர மன்றத்

தலைவராக இருந்தார். காங்கிரஸ் தலைவராக விளங்கிய பி. வரதராஜுலு நாயுடுவும், சி. இராச கோபாலாச்சாரியும் மதுரை போன்ற இடங்களுக்குச் செல்லும்போதெல்லாம் ஈரோட்டில் ஈ.வெ.இரா. வைச் சந்திப்பார்கள். இம்மூவரிடையே நட்பு வளர்ந்தது. ஈ.வெ.இரா. வைக் காங்கிரசில் சேரும்படி மற்ற இருவரும் தூண்டினர். ஈ.வெ.இரா. நகர மன்றத் தலைவர் பதவியையும் மற்றும் அவர் வகித்த 26 கவுரவப் பதவிகளையும் விட்டு விலகிக் காங்கிரசில் உறுப்பினரானார்.

ஈரோடு நகரமன்றத் தலைவராக 1917 1919–இல் ஈ.வெ.இரா. பணியாற்றிய காலத்தில், ஈரோடு மக்களின் நன்மையைக் கருதி அவர் ஆற்றிய பணிகள் பல. அவற்றுள் குறிப்பிடத்தக்கவை சில. காவிரியிலிருந்து நல்ல குடி தண்ணீர் கிடைக்க வசதியாக, ஈரோட்டில் சிங்காரவனத்தில் பெரிய தண்ணீர்த் தொட்டியைக் கட்டி, குழாய் வழியாகக் குடிநீர் வழங்கப்பட வழி செய்தார். ஈரோடு கடைத்தெரு மிகக் குறுகலாக இருந்தது. எவருடைய எதிர்ப்புக்கும் அஞ்சாமல் ஆக்கிரமிப்புக் கட்டடங்களை இடித்துக் கடைத்தெருவை அகலப்படுத்தினார். இப்பணிகளை மக்கள் பாராட்டினர்.

ஈரோட்டில் சுகாதாரப் பணிகள் செம்மையாகச் செய்யப்பட்டிருந்தன. ஒரு சமயம் ஈரோட்டுக்கு வந்த சி. இராச கோபாலாச்சாரி, ஈ.வெ.இரா. விடம் இது பற்றிப் புகழ்ந்து பேசிவிட்டு, "உங்கள் ஊர் சானிட்டரி இன்ஸ்பெக்டரை எங்கள் நகர சபைக்குக் கொடுங்கள்" என்று கேட்டார். அந்த அளவுக்கு ஈரோட்டில் சுகாதாரம் பேணப்பட்டது.

காங்கிரஸ் கட்சி 1919–இல் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவக் கொள்கையை ஏற்றுக் கொண்டது. மேலும், பதவி; உத்தியோகங்களில் 50 விழுக்காடு பார்ப்பனர் அல்லாதாருக்கு ஒதுக்கி அளிக்கப்படும் எனவும், தேர்தலில் போட்டியிடும் எண்ணம் காங்கிரசுக்கு இல்லை என்றும் ஈ.வெ.இராவிடம் கூறியிருந்தனர். ஈ.வெ.இராவும் அதை நம்பியிருந்தார்.

அன்றைய சென்னை மாகாணத்தில் ஆட்சிப்பொறுப்பில் நீதிக் கட்சியினர் இருந்தனர். நீதிக்கட்சித் தலைவர்களும் பிரசாரகர்களும் தம் பேச்சாற்றல் மூலம் பாமர மக்களிடம் செல்வாக்குப் பெற்றனர். அவர்களுடைய பிரச்சாரத்துக்கு ஈடுகொடுக்கக் காங்கிரசில் ஈ.வெ.இராவே திறமை பெற்றிருந்தார். காங்கிரசின் நிர்மாணத் திட்டங்களை மக்களிடையே பிரச்சாரம் செய்வதில் தனிச் சிறப்புள்ளவராகவும் ஈ.வெ.இரா திகழ்ந்தார். எனவே தமிழ் மாகாண காங்கிரசின் செயலாளராக 1921, 1922, 1923–இல் தேர்வு செய்யப்பட்டார்.

தமிழ்நாடு காங்கிரஸ் தலைவராக 1923 டிசம்பரில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஈ.வெ.இரா. 1924 மார்ச் மாதம் கேரளத்தில் வைக்கம் மகாதேவர் கோயிலின் முன் தொடங்கப்பட்ட தீண்டாமை ஒழிப்புப் போரில் முழு மூச்சுடன் ஈடுபட்டார். அவருடன் துணைவியார் நாகம்மாள், தங்கை கண்ணம்மாள், நாகர்கோவில் டாக்டர் எம்.இ. பெருமாள் நாயுடு, கோவை அ. அய்யாமுத்து, எஸ். இராமநாதன் போன்ற தலைவர்களும் மற்றும் எண்ணற்ற தமிழ்நாட்டுத் தொண்டர்களும் வைக்கம் போராட்டத்தில் ஈடுபட்டனர். வைக்கம் கோவிலைச் சுற்றியுள்ள பொதுப்பாதைகளில், ஈழவர், தீயர், புலையர், பறையர், அயித்தக்காரர், வாணியர் முதலான தீண்டப்படாத வகுப்பினர் நடக்கவே கூடாது என்றிருந்த தடை அப்போராட்டத்தால் நீக்கப்பட்டது. இந்தியாவில் நடைபெற்ற முதலாவது தீண்டாமை ஒழிப்புப் போராட்டம் இதுவேயாகும். இதனை அப்போதே அறிந்த டாக்டர் அம்பேத்கர் வியந்து பாராட்டினார்.

1924–இல் திருநெல்வேலி மாவட்டம் சேரன் மகாதேவியில் பாலபாரதி, தமிழ்க்குருகுலம், பரத்துவாஜ ஆசிரமம் என்ற பெயர்களில் 'தேசிய வீரர்கள் பயிற்சி கூடம்' ஒன்றை வ.வே.சு. அய்யர் தொடங்கினார். அதற்கான நிலத்தை வாங்கிக் கொடுத்தவர் கானாடுகாத்தான் வயி.சு. சண்முகம் செட்டியார் ஆவார். நிதியளித்தோர்

தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியினரும் மற்றும் பல பார்ப்பனரல்லாதாரும் ஆவர். ஆயினும் அங்குப் பார்ப்பனருக்கென்று தனிக் குடிநீர் பானையும், நல்ல வகையான உணவும் தனியே வழங்கப்பட்டன. பார்ப்பனர் தனி இடத்தில் அமர வைத்து உணவளிக்கப்பட்டனர். தேசிய வீரர்களுக்கான குருகுலத்தில் மேற்கொள்ளப்பட்ட அந்த வருண வேறுபாட்டு நடப்பை ஈ.வெ.இரா. டாக்டர் பி. வரதராஜுலு நாயுடு மற்றும் பல பார்ப்பனரல்லாத தலைவர்கள் கடுமையாக எதிர்த்துப் போராடினர்.

எதிர்பாராதவிதமாக, 1925 சூனில் வ.வே.சு. அய்யர் மறைவுற்றதால், அந்தச் சிக்கல் தீர்க்கப்படாமல் அப்படியே விடப்பட்டது.

ஈ.வெ.இரா வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தைக் காங்கிரசின் கொள்கையாக ஏற்க வேண்டுமென்று, 1919 (திருச்சி), 1920 (திருநெல்வேலி), 1921 (தஞ்சை), 1922 (திருப்பூர், 1923 (மதுரை, திருச்சி, சேலம்), 1924 (திருவண்ணாமலை) ஆகிய ஆண்டுகளில் நடைபெற்ற தமிழ் மாகாண காங்கிரஸ் மாநாடுகளில் வலியுறுத்தினார்.

பார்ப்பன வகுப்புத் தலைவர்களின் சூழ்ச்சியின் காரணமாக அக்கோரிக்கை காங்கிரசால் ஏற்கப்படவில்லை. காங்கிரஸ் கட்சி 1926 தேர்தலில் போட்டியிடுவது என்று 1925–இல் முடிவு செய்தது. எனவே, காங்கிரஸ் கட்சியிலும், அரசு வேலைகளிலும், அரசுப் பதவிகளிலும் பார்ப்பனர் அல்லாதாருக்குத் தனி ஒதுக்கீடு தரும் கொள்கையைக் காங்கிரஸ் ஏற்க வேண்டுமென்று 22.11.1925 இல் காஞ்சிபுரத்தில் திரு.வி.கலியாணசுந்தர முதலியார் தலைமையில் நடைபெற்ற காங்கிரஸ் மாநாட்டில் ஈ.வெ.இராவும், மயிலாடுதுறை எஸ். இராமநாதனும் தீர்மானத்தை முன்வைத்து வாதாடினர். காங்கிரஸ் பார்ப்பனத் தலைவர்களின் சூழ்ச்சியால் பொது மாநாட்டில் அத்தீர்மானம் ஆலோசனைக்கு எடுத்துக் கொள்ளப்படாமலேயே ஒதுக்கப்பட்டது. அது கண்டு வெகுண்ட ஈ.வெ.இரா. அம் மாநாட்டுப் பந்தலிலேயே "காங்கிரசால் பார்ப்பனர் அல்லாதவர்கள் நன்மைபெற முடியாது; காங்கிரசை ஒழிப்பதே என் வேலை" எனச் சூளுரைத்து எஸ். இராமநாதன், என். தண்டபாணிப் பிள்ளை மற்றும் பல பார்ப்பனரல்லாத தலைவர்களுடன் வெளியேறினார்.

1919–இல் வகுப்புவாரி உரிமையில் நாட்டங்கொண்ட ஈ.வெ.இரா. 1973 இல் அவர் மறையும் வரையில் தொடர்ந்து வகுப்புரிமைக்காகப் போராடினார்.

**'குடி அரசு' வார ஏடு தொடக்கம்**

ஈ.வெ.இரா.வும், ஈரோடு சுருங்கல்பாளையம் வா.மு. தங்கப் பெருமாள் பிள்ளையும் 1922–லேயே ஓர் ஏடு தொடங்க வேண்டுமென்று திட்டமிட்டிருந்தனர். இவர்கள் இருவரும் ஆசிரியர்களாக இருந்து வெளியிட்ட 'குடி அரசு' தமிழ் வாரஏடு 2.05.1925 சனி அன்று ஈரோட்டில் வெளியிடப்பட்டது. திருப்பாதிரிப்புலியூர் சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாச்சாரியார் சுவாமிகள் என்னும் ஞானியார் சுவாமிகள் 18.4.1925–இல் 'குடி அரசு' அலுவலகத்தைத் திறந்து வைத்தார்.

'குடி அரசு' ஏட்டில் முதலாவது இதழின் (மலர் 1) ஆசிரிய உரையில் கண்டுள்ள செய்திகளில் சில :

"தாய்த்திரு நாட்டிற்கு யாம் இதுகாறும் இயற்றிவரும் சிறு தொண்டினை ஒரு சிறு பத்திரிகை வாயிலாகவும் எம்மால் இயன்றளவு ஆற்றிவரல் வேண்டுமென இரண்டாண்டுகளுக்கு முன்னர் எம்மிடத்து எழுந்த பேரவா இன்று நிறைவேறும் பேற்றை அளித்த இறைவன் திருவடிகளில் இறைஞ்சுகின்றோம். ஒரு சிறு பத்திரிகையையேனும் செவ்வனே நடத்தும் ஆற்றல் ஒரு சிறிதும் எமக்கில்லை என்பதை நன்குணர்வோம். பேரறிவும், பேராற்றலும், விரிந்த கல்வியும், பரந்த அனுபவமும் உடையவர்களே இத்தொண்டினை நடத்தற்குரியர். இவ்வருங்குணங்கள் எம்பால் இல்லாமல் இருந்தும்

மேலே கண்ட தீர்மானங்கள் சுயமரியாதைக் கொள்கையைப் பற்றிய அடிப்படை நோக்கங்களான வருணாசிரம ஒழிப்பு, தீண்டாமை ஒழிப்பு, பார்ப்பனப் புரோகித ஒழிப்பு, இந்துக் கோவில்களில் எல்லோரும் அர்ச்சகர் ஆகும் உரிமை முதலானவற்றை மிகத் தெளிவாகக் கூறுகின்றன. மேலும் 2.5.1925–இல் 'குடி அரசு' முதலாவது இதழில் அறிவிக்கப்பட்ட குறிக்கோளையும் உணர்த்துகின்றன.

சுயமரியாதைக் கொள்கைப் பிரச்சாரத்தினூடே புத்தரின் கொள்கைகள் பற்றியும், திருக்குறளைப் பற்றியும் மக்களிடையே அவ்வப் போது அவர் எடுத்துரைத்தார். சுயமரியாதைக் கொள்கையின் இன்னொரு வேலைத் திட்டமான வகுப்புவாரி உரிமைக் கொள்கையை முன் வைத்து, அன்று பதவியிலிருந்த சுயேச்சை அமைச்சரவையினை ஆதரித்தார். அமைச்சர் எஸ். முத்தையா முதலியார், முதலாவது அமைச்சர் டாக்டர். பி. சுப்புராயன் ஆகியோரைக் கொண்டு, 1927–இல் முதன் முதலாக வகுப்புவாரியான இட ஒதுக்கீடு ஆணை நடப்புக்கு வர வழி வகுத்தார்.

1927–இல் டாக்டர் பி. சுப்புராயன் முதலமைச்சராக இருந்த காலத்திலும், பின்னர் தொடர்ந்தும் வகுப்புவாரி உரிமை செம்மையாக நடப்புக்கு வர வேண்டி நீதிக் கட்சி அமைச்சரவைகளை ஆதரித்தார். சென்னை மாகாண மக்கள் ஐந்து வகுப்பினராகப் பிரிக்கப்பட்டு இட ஒதுக்கீடு நடைமுறைப்படுத்தப்பட்டது. இதே தன்மையிலான வகுப்புவாரி இட ஒதுக்கீடு சென்னை மாகாணத்திலுள்ள மத்திய அரசாங்கத்துறை வேலைகளிலும் அளிக்கப்பட வேண்டும் என்கிற கோரிக்கையை 1928–இல் ஈ.வெ.இரா. முன் வைத்தார். இதற்கான முயற்சிகளைப் பொப்பிலி அரசர் ஆட்சிக் காலத்தில் ஏ. இராமசாமி முதலியார் மேற்கொண்டார். இதில் 1915–இல் வெற்றி கிட்டியது. இதன் பயனாகச் சென்னை மாகாணத்தில் மட்டும் பார்ப்பனர், பார்ப்பனரல்லாதார், ஆதித் திராவிடர் ஆகிய வகுப்பினர்க்கு மத்திய அரசுத் துறைப் பணிகளில் 1936–இல் இட ஒதுக்கீடு முறை முதன் முதலாக நடப்புக்கு வந்தது. இத்துறைகளில் இஸ்லாமியர் முதலான மதச் சிறுபான்மையினர்க்கு 1935–லேயே தனி இட ஒதுக்கீடு நடப்புக்கு வந்து விட்டது.

### 1.4.3 அயலகப் பயணம்

மலேசியாவிலுள்ள தமிழ் மக்களின் அழைப்பை ஏற்று 1929 டிசம்பர் 20 முதல் 1930 சனவரி 11 முடிய நாகம்மாள் மற்றும் சுயமரியாதைத் தொண்டர்களுடன் மலேசியாவில் நெடும் பயணத்தை மேற்கொண்ட ஈ.வெ.இரா, மலேசியத் தமிழர்கள் சாதிப்பழக்கம், மூடப்பழக்கங்கள் இவற்றைக் கைவிட வேண்டும் என்றும் அங்குள்ள மக்களோடு ஒன்றித்து வாழ வேண்டும் என்றும் அறிவுறுத்தினார்.

பினாங்கிலிருந்து புறப்பட்ட 11–1–1930 நாளிலிருந்து, 16–1–1930–இல் நாகப்பட்டினத்தில் வந்து இறங்கிய இடைப்பட்ட நாள்களில் ஈ.வெ.இரா முகத்தை மழித்துக் கொள்ளவில்லை. அக்கட்டத்தில் வளர்ந்த குறுந்தாடி அப்படியே விடப்பட்டு நெடியதாடியாக வளர்ந்துவிட்டது.

தமிழகத்திலும், அண்டைய அயல்நாடுகளிலும், சுயமரியாதைக் கொள்கைகளைத் தீவிரமாகப் பரப்பிய அவர், 1931 முதல் சமயம் நேர்ந்தபோதெல்லாம், பொருளாதார சமதர்மக் கொள்கைகளையும் எடுத்துச் சொன்னார். சோவியத் நாட்டில் புதியதாக மலர்ந்திருந்த பொதுவுடைமை ஆட்சிக் கொள்கையும் அவ்வாறு சிந்தனைக்கு விருந்தாக அமைந்தது.

எனவே, சமதர்மக் கொள்கைகள் சோவியத்து நாட்டில் ஆட்சி மூலம் செயல்படுத்தப்படுவதை நேரிற்கண்டறியவும், வாய்ப்பு நேர்ந்தால் அங்கேயே தங்கிவிடவும் பெரிதும் விருப்பங்கொண்ட அவர், 1931 டிசம்பர் 13 இல், மேலைநாடுகளுக்குப் பயணமானார். அவர் பயணம் சென்ற வழியில் எகிப்து

நாட்டிலிருந்து 'குடி அரசு' க்கு எழுதி அனுப்பிய பயண வருணனைக் கட்டுரைகள் அவர்தம் கூர்த்த மதியையும், சொல்லாற்றலையும் நன்கு புலப்படுத்துவனவாக உள்ளன. (ஈ.வெ.இரா. சிந்தனைகள் பக் 1180–1186)

சோவியத்து நாட்டில் மிகப் பல இடங்களில் நாத்திகச் சங்கங்களாலும், இளைஞர் சங்கங்களாலும், தொழிற்சாலை நிர்வாகத்தினராலும் அவரும், அவர்தம் குழுவினரும் பெருமதிப்புடன் வரவேற்கப்பட்டனர்.

14–2–1932 முதல் 17–5–1932 வரை அவர் சோவியத்து நாட்டில் தங்கிச் சுற்றுப் பயணம் மேற்கொண்டபோது, சோவியத்து நாத்திகச் சங்கங்களின் தலைவர்களும், செயலாளர்களும், மொழிபெயர்ப்பாளர்களும் அவருடன் இருந்து பேருதவி புரிந்தனர். அங்குப் பயணம் மேற்கொண்ட மூன்று மாதத்தில் சோவியத்தின் பெரிய தொழிற்சாலைகள், கல்வி நிலையங்கள், நூல் நிலையங்கள், படிப்பகங்கள், நாடக அரங்குகள், விவசாயப் பண்ணைகள், பொது உண்டிச் சாலைகள், தொழிலாளர் சங்கங்கள் முதலான பல அமைப்புகளையும், லெனின் சவம், லெனின் மியூசியம் முதலானவற்றையும் நேரில் பார்வையிட்டார். பலவிடங்களில் சங்கங்களின் சார்பிலும், பொதுக் கூட்டங்களிலும் வரவேற்புகள் அளிக்கப்பட்டன.

அவ்வமயம் ஸ்டாலின் முன்னிலையில் அங்கு நடந்த "மே நாள் (1932 மே, 1) விழா வில், ஈ.வெ.இரா. கலந்து கொண்டார். 'இந்தியாவிலிருந்து வந்துள்ள நாத்திகத் தலைவர்' என அவர் அவையினருக்கு அறிமுகப்படுத்தப்பட்டு, ஸ்டாலின் அளித்த மரியாதையையும் ஏற்றார்.

அப்பயணத்தில் ஆப்பிரிக்கா, கிரீஸ், துருக்கி, ஜெர்மனி, ஸ்பெயின், பிரான்சு, போர்ச்சுகல், இங்கிலாந்து முதலிய நாடுகளுக்கும் சென்று பல இடங்களையும், பல நாள்கள் சுற்றிப் பார்த்தார். ஜெர்மனியில் பெர்லின் நகரத்திலும், ஸ்பெயினில் மாட்ரிட் நகரத்திலும், பிரான்சில் பாரிசிலும் பல நாள்கள் தங்கியிருந்து, ஆங்காங்கிருந்த தொழிற்சாலைகளையும், சங்கங்களையும் பார்வையிட்டார். ஜெர்மனியில் பல இடங்களில் இருந்த நிர்வாணச் சங்கங்களுக்கும் சென்றார்.

இங்கிலாந்து நாட்டில் கம்யூனிஸ்ட் தலைவர் திரு. சக்லத்வாலாவைக் கண்டு பேசினார்; பிரிட்டிஷ் தொழிற்கட்சித் தலைவர் திரு லான்ஸ்பரியைக் கண்டு பேசினார்.

இவ்வாறு சோவியத்து – அய்ரோப்பிய – இலங்கைச் சுற்றுப் பயணத்தை 11– மாத காலம் மேற்கொண்ட அவர், திரும்புகாலில் இலங்கையில் பல இடங்களில் சொற்பெருக்காற்றினார். அவர்தம் 'இலங்கைச் சொற்பொழிவுகள்' சுயமரியாதைக் கொள்கைக்குத் தெளிவான விளக்கங்களாகவும், சமதர்மக் கொள்கைக்குச் சிறந்த பாலபாடங்களாகவும் திகழ்வனவாம்.

மத்திய–மாகாண அரசு வேலையில் வகுப்புவாரி இட ஒதுக்கீடு நடைமுறைப்படுத்தப்பட்டது. சிற்றூர்ப் புறங்களில் தொடக்கக் கல்வி பரப்பப்படுவதற்கான ஏற்பாடு, இந்துமத தர்ம பரிபாலனச் சட்டம் நிறைவேற்றம், தீண்டப்படாத வகுப்பினர் கல்வி முன்னேற்றத்திற்கான தனி ஏற்பாடுகள், தேவதாசி முறை ஒழிப்புச் சட்டம் நிறைவேற்றம் முதலான சீரிய பணிகளையும் மற்றும் பல திட்டங்களையும் நிறைவேற்றியது, தென்னிந்தியர் நலவுரிமைச் சங்கம் என்கிற நீதிக்கட்சியின் ஆட்சி.

ஆயினும் நீதிக்கட்சித் தலைவர்கள் பதவிகளுக்காக மட்டும் பார்ப்பனரையும் ஆதிக்கத்தையும் எதிர்ப்பது என்று செயல் பட்டனரே அன்றிச் சொந்த வாழ்விலும், சமூக வாழ்விலும் பார்ப்பனியத்தைக் கைவிடவோ, அடியோடு ஒழித்திடவோ முன் வரவில்லை. மேலும், 1920 முதல் 1937 வரையில் ஆட்சியினால் நிறைவேற்றப்பட்ட சீரிய திட்டங்களைப் பொது மக்களிடம் போதிய அளவில் எடுத்துச் சொல்லத் தவறினர். எனவே, 1937–இல்

சிறைப்பட்டிருந்த காலத்தில் 1938 டிசம்பர் 29, 30 ஆகிய நாள்களில் சென்னையில் நடைபெற்ற தென்னிந்தியர் நலவுரிமைச் சங்க மாநாட்டிற்குத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். சிறையிலிருந்தவாறே ஈ.வெ.இரா. விடுத்திருந்த தலைமையுரையை சர்.ஏ.டி. பன்னீர்செல்வம் உணர்ச்சி ததும்பப் படித்து மாநாட்டினர் முன் வைத்தார். அந்தத் தலைமை உரையிலும் 'தமிழ்நாடு தமிழருக்கே' என்ற நாட்டுப் பிரிவினை முழக்கத்தினை அவர் கிளத்தியிருந்தார்.

ஈ.வெ.இரா 'பெரியார்' என அழைக்கப்பட்டது நெடிய பின்னணியைக் கொண்டது.

'குடி அரசு' இதழ்வரையில் 'ஆசிரியர்' : ஈ.வெ. ராமசாமி நாயக்கர் என்றே குறிப்பிடப்பட்டது. 25-12-1927 இதழ் தொடங்கி 'நாயக்கர்' என்ற சாதிப் பட்டத்தை அவரே நீக்கி விட்டார். இந்த இடத்தில் பெரியார் என்றசொல்லைச் சேர்ப்பது மரியாதை தருவது எனக்கருதி, 1928-இல், முதன் முதலில் 'ஈ.வெ.இராமசாமிப் பெரியார்' என எழுதியவர் நாகர்கோவில் வழக்குரைஞர் பி. சிதம்பரம் பிள்ளை ஆவார். 1938 நவம்பர் 12, 13-இல் சென்னையில் நடைபெற்ற 'தமிழ்நாட்டுப் பெண்கள் மாநாடு', பெண் விடுதலைக்கு ஈ.வெ.இரா. ஆற்றியுள்ள தொண்டைப் போற்றும் தன்மையில் 'பெரியார்' என்ற சிறப்புப் பெயராலேயே அவரைக் குறிக்க வேண்டும் எனத் தீர்மானம் நிறைவேற்றியது. அது முதற்கொண்டு, 'பெரியார்' என்றால் அது ஈ.வெ.இராமசாமி அவர்களை மட்டுமே குறிப்பதாயிற்று.

### 14.5 திராவிடர் கழகம் தோற்றம்

தமிழர் தலைவரான பெரியார் ஈ.வெ.இரா. 30-12-1938-இல் நீதிக்கட்சியின் தலைவரானார். திராவிடர் இயக்கத்தின் தலைமை ஈ.வெ.இரா.வை வந்தடைந்தது முதல், சுயமரியாதை இயக்கத்தின் கொள்கைகள் அனைத்தும் திராவிடர் இயக்கத்தின் கொள்கைகள் ஆயின.

ஏறக்குறைய 18 ஆண்டுகள் சட்டமன்றப் பதவி, அமைச்சுப் பதவி இவற்றை ஆண்டதில் பெருநாட்டங் கொண்டிருந்த நீதிக்கட்சியின் போக்கை மாற்றி, அதை அரசியல் - சமுதாய - பொருளாதாரப் புரட்சி இயக்கமாக உருவாக்கலானார். பார்ப்பனர் அல்லாதார் இயக்கம் அல்லது தென்னிந்தியர் நலவுரிமைச் சங்கம் அல்லது நீதிக்கட்சி என்கிற பெயர்களால் இயங்கி வந்த அமைப்பைத் திராவிடர் இயக்கம் எனப் பெயரிடுவதில் முனைந்தார். திராவிடர் இன நலன் காப்பதே இவ்வியக்கத்தின் நோக்கம் என்பதே இதற்கு அடிப்படையாகும்.

1941 முதல் அமைப்புக்கான கிளைகளைத் தொடங்கும்போது 'திராவிடர் கழகம்' என்றே அழைக்கலானார். 27-8-1944-இல் சேலத்தில் நடைபெற்ற நீதிக்கட்சி மாகாண மாநாட்டில், இயக்கத்தின் பெயரைத் 'திராவிடர் கழகம்' என முறைப்படி மாற்றி அமைத்தார். இதற்கான தீர்மானம் 'அண்ணாத்துரை தீர்மானம்' என்கிற பெயரில் நிறைவேற்றப்பட்டது.

கல்லூரி மாணவர்களும், படித்த இளைஞர்களும் திராவிடர் இயக்கத்தில் ஆர்வத்துடன் இணைந்தனர்.தமிழ்நாடு தழுவிய அளவில் சுயமரியாதைக் கொள்கைப் பரப்புரை, திராவிட நாட்டுப் பிரிவினைக் கோரிக்கை விளக்க உரை எனச் சூறாவளிப் பயணம் தொடர்ந்து நடந்தது. வட்டந்தோறும், மாவட்டந்தோறும் பல்லாயிரக்கணக்கான மக்கள் பங்கேற்கும் மாநாடுகள் நடந்தன.

1942-இல் பிரிட்டிஷ் அமைச்சரவைத் தூதுக்குழு சர்.ஸ்டாஃபோர்டுகிரிப்ஸ் தலைமையில் இந்தியாவுக்கு வந்தபோது, சென்னை மாகாணத்தைத் தில்லி ஆதிக்கத்தில் இருந்து விடுவித்து பிரிட்டனின் நேரடிப் பார்வையில் வைக்க வேண்டும் என்கிற கோரிக்கையை ஈ.வெ.இரா. முன் வைத்தார். இது கிரிப்ஸ் குழுவினரால் புறக்கணிக்கப்பட்டது. எனவே, வெள்ளையர் ஆதிக்கம் ஒழிந்த தனித் திராவிட நாடு

விளக்கிக் கூறிவிட்டு, தண்டனையை ஏற்று மகிழ்ச்சியுடனேயே சிறை சென்றார். அவருடைய "தொண்டர்களும் அத்தகைய நெறிமுறையையே பின்பற்றினர்."

1956–இல் இராமன் பட எரிப்புக் கிளர்ச்சியை நடத்தினார்.

இந்திய அரசியல் சட்டத்தில் 'வருணாசிரம' அமைப்புக்குக் கெட்டியான பாதுகாப்பு இருக்கிறது என உணர்ந்த அவர், அப்படிப் பாதுகாப்பைத் தரும் விதிகள் 13, 25, 372 முதலானவற்றை அரசமைப்புச் சட்டத்திலிருந்து நீக்க வேண்டும் என 1957–இல் கோரினார்.

அரசு அக்கோரிக்கையை ஏற்கவில்லை. எனவே அரசியல் சட்ட விதிகள் 13, 25, 372 ஆகியவற்றைத் தனியே அச்சிட்டு 26–11–1957–இல் எரிக்கும்படி 3–11–1957–இல் தஞ்சையில் தீர்மானம் நிறைவேற்றினார். இக்கிளர்ச்சியைப் பற்றி அறிந்த இந்திய அரசும் மாநில அரசும் இதை நசுக்கிட முயன்றன. அரசமைப்புச் சட்டத்தை எதிர்ப்பவர்களைத் தண்டிக்க வேண்டிப் புதிதாக ஒரு சட்டத்தைத் தமிழ்நாட்டு அரசு 11–11–1957–இல் இயற்றியது. அதையும் மீறி 10,000 தொண்டர்கள் 26–11–1957–இல் அரசமைப்புச் சட்டத்தை எரித்தனர். அவர்களில் 2997 பேர் சிறைத்தண்டனை அடைந்தனர்.

ஆயினும் சுயமரியாதை இயக்கத்தின் உயிரான வருண ஒழிப்புக் கொள்கை இன்றுவரையில் நிறைவேறாமலேயே உள்ளது என்பது நினைவில் கொள்ளத்தக்கது.

தமிழரின் கல்வி நலன், வகுப்புவாரி உரிமைக் கொள்கை இவற்றில் உண்மையான அக்கறை உள்ளவர் காங்கிரஸ் தலைவர் கு. காமராசர். அவற்றை முன்னிட்டு 1954 முதல் 1963 வரை காமராசர் ஆட்சிக்குப் பேராதரவு அளித்தார் பெரியார். ஆயினும் காமராசர் முதலமைச்சராக விளங்கிய 1954–க்கும் 1963–க்கும் இடைப்பட்ட காலத்தில்தான் அரசமைப்புச் சட்ட எரிப்புக் கிளர்ச்சி (1957), தட்சணப் பிரதேச அமைப்பு எதிர்ப்புக் கிளர்ச்சி (1956), உணவு விடுதிகளில் பெயர்ப் பலகைகளில் இருந்த 'பிராமணாள்' என்ற எழுத்தை அழிக்கும் கிளர்ச்சி (1957) தமிழ்நாடு நீங்கிய இந்தியத் தேசப்பட எரிப்புக் கிளர்ச்சி (1960) முதலானவற்றைத் தமிழ்நாடு தழுவிய அளவில் பெரியார் நடத்தினார்.

1962–க்குப் பின்னர் சமதர்மக் கொள்கையைப் பரப்புவதற்கு முதன்மை அளித்தார். ஆங்காங்கே சமதர்ம மாநாடுகளையும், சாதி ஒழிப்பு மாநாடுகளையும் இணைத்தே நடத்தினார். இராமாயண எரிப்புக் கிளர்ச்சியை 1965 – 66–ஆம் ஆண்டுகளில் நடத்தினார். பல ஊர்களிலும் கூட்டங்கள் நடத்தி, இராமாயணத்தை மிகக் கடுமையாக விமரிசித்தார்.

1967 பொதுத் தேர்தலில் தமிழ்நாட்டில் காங்கிரசுக் கட்சி தோற்றது. திராவிட முன்னேற்றக் கழகம் வெற்றி பெற்றது. திராவிட முன்னேற்றக் கழகத்தலைவர் சிஎன். அண்ணாத்துரை முதலமைச்சரானார். பெரியாருக்கு நன்றிக்கடன் ஆற்ற விரும்பிய அவர் சுயமரியாதைத் திருமணங்கள் செல்லுபடியாகும் வண்ணம், 1967 நவம்பரிலேயே ஒரு சட்டத்தை நிறைவேற்றினார். தமிழர் அனைவரும் மகிழும் வண்ணம் 'சென்னை மாகாணம்' என்பதை மாற்றித் 'தமிழ்நாடு' எனப் பெயரிட்டார். 6–3–1967 முதல் பெரியார் தி.மு.க. ஆட்சியை ஆதரித்தார்.

### 1.4.6 வருண ஒழிப்பு இறுதிப் போராட்டம்

1947–இல் டாக்டர் பி.ஆர். அம்பேத்கர் முன்மொழிந்த இந்துச் சட்டத் திருத்த மசோதாவின் சில பகுதிகள் 1955–1956–இல் நிறைவேற்றப்பட்டன. அதன் பின்னரும், திருமணங்களில் வருணக்கலப்பு ஏற்படுவதற்கு உரிமை வந்திருந்தாலும், இந்துக்கோவில்களின் கருவறைகளில் பார்ப்பனர் அல்லாத எந்த ஓர் இந்து உறுப்பினரும் நுழைய முடியாது என்கிற வடிவிலும், பார்ப்பனர் தவிர்த்த வேறு எவரும் அர்ச்சகர் ஆக முடியாது என்றும் இந்துச் சட்டத்திலும் இந்திய அரசமைப்புச் சட்டத்திலும் இன்றும்

பாடம் – 2

# இந்திய, தமிழகச் சமுகச் சீர்த்திருத்த இயக்க வரலாறு

**2.1 முன்னுரை**

முன் பாடத்தில் பெரியாரின் வாழ்வும் பணியும் குறித்து பொது நோக்கில் அறிந்து கொண்டீர்கள். இப்பாடத்தில் இந்திய மற்றும் தமிழ்ச் சமூகம் சீர்திருத்த இயக்க வரலாற்றினை அறிந்து கொள்ள இருக்கிறீர்கள்.

**2.2 நோக்கங்கள்**

- பசவர், வேமனா ஆகியோர் இந்து சமயத்தின் மீது ஏற்படுத்திய தாக்கத்தை விளக்குதல்.
- பெண்கள் உடன்கட்டை ஏறுவதை ஒழித்திட, இராசா ராம்மோகன் ராய் ஆற்றிய பங்கு பற்றி அறிந்து கொள்ளுதல்.
- வள்ளலார் சமய மூடப்பழக்க வழக்கங்களுக்கெதிரானவர் என்பதனை விளக்குதல்.
- சோதிராவ் புலே மேற்கொண்ட சமுக சீர்திருத்த நடவடிக்கைகள் பற்றிப் பட்டியலிடல்.
- அத்திப்பாக்கம் அ. வேங்கடாசல நாயக்கர், பு. முனுசாமி நாயக்கர், வைகுண்டசாமி ஆகியோர் தம் எழுத்துகள் மூலம் எடுத்துக் கூறிய சமூக சீர்திருத்தக் கருத்துகளைப் பட்டியலிடுதல்.
- ஸ்ரீ நாராயணகுரு ஈழவர்களுக்கு ஆற்றிய சீரிய தொண்டு பற்றிக் கட்டுரை எழுதுதல்.
- வேத மத மறுமலர்ச்சிக்கு விவேகானந்தர் ஆற்றிய தொண்டு பற்றி ஒரு கட்டுரை வரைதல்.
- பண்டிதர் அயோத்திதாசர், டாக்டர் பி.ஆர். அம்பேத்கர், ஆகியோர் தாழ்த்தப்பட்டோர் முன்னேற்றத்திற்கு ஆற்றிய தொண்டு பற்றிக் கட்டுரைகள் எழுதுதல்.
- டாக்டர் பி.ஆர். அம்பேத்கரின் 'இந்துச் சட்டத் திருத்த மசோதா' பற்றிக் குறிப்பெழுதுதல்.
- நாத்திகக் (கடவுள் மறுப்பு) கொள்கைகள் பரவுவதற்குக் கோரா மேற்கொண்ட முயற்சிகளை விளக்குதல்.
- மூட நம்பிக்கை ஒழிப்புக்கு டாக்டர் அப்ரஹாம் டி. கோவூர் ஆற்றிய பணிகளை விளக்குதல்.

பாட அமைப்பு

Hari priya

- 2.1 முன்னுரை
- 2.2 நோக்கங்கள்
- 2.3 பாட அறிமுகம்
- 2.4 பாடப் பிரிவுகள்

2.4.1 பசவர்

2.4.2 கவிஞர் வேமனா

2.4.3 இராசா ராம் மோகன் ராய்

2.4.4 அந்திப்பாக்கம் அ. வேங்கடாசல நாயக்கர்

2.4.5 இராமலிங்க அடிகள்

2.4.6 சுவாமி தயானந்த சரசுவதி

2.4.7 சுவாமி விவேகானந்தர்

2.4.8 கோ. இராமச்சந்திர ராவ் (கோரா)

2.5 பாடந் தொகுப்புரை

2.6 முக்கியச் சொற்கள்

2.7 தன்மதிப்பீட்டு விடைகள்

2.8 மாதிரி வினாக்கள்

## 2.3 பாட அறிமுகம்

இந்தியா மற்றும் தமிழகத்தின் சமூகச் சீர்திருத்த இயக்க வரலாறுகளும் அந்த இயக்கங்களின் சமூகப் பணிகளும் இப்பாடப் பகுதியில் விளக்கப்படுகின்றன. தீண்டாமை ஒழிப்பு, பார்ப்பனிய எதிர்ப்பு, உருவ வழிபாடு மற்றும் உடன்கட்டை எதிர்ப்பு, விதவை மறுமணம், சமத்துவம், சமூக நீதி ஆகியவற்றுக்குப் பங்களிப்பு செய்த சீர்திருத்தவாதிகளின் வரலாறும் இப்பகுதியில் இடம் பெறுகின்றன. சுயமரியாதை, சமத்துவம், தாலி தவிர்ப்பு, வேத மறுப்பு, சாதிய அமைப்புகளின் மூடப்பழக்கவழக்க எதிர்ப்பு முதலான கருத்துகளும் இடம் பெறுகின்றன.

## 2.4 பாடப் பிரிவுகள்

### 2.4.1 பசவர் (கி.பி.1131–1167)

தெலுங்கு நாட்டில் நமக்குக் கிடைக்கின்ற வரலாற்று விவரங்களிலிருந்து வருண அமைப்பின் கூறுகளை மறுத்தும், எதிர்த்தும் இயக்கம் கண்டவர்களை அல்லது தொண்டு செய்தவர்களைக் கால அடிப்படையில் நிரல்படுத்திப் பார்ப்பது பயனுள்ளதாகும்.

வருண அமைப்பை முதன் முதலாக எதிர்த்தவர் கவுதம புத்தர் ஆவார். அவரை அடுத்து மிகப் பெரிய கால இடைவெளிக்குப் பின்னர் 12 ஆம் நூற்றாண்டு முதல் அத்தகைய எதிர்ப்பைக் காட்டியவர்கள் பலர் உள்ளனர்.

தெலுங்கு நாட்டில் பீஜப்பூர் மாவட்டத்தில் இங்குளேசுவரபாகவாடி என்னும் பகுதியில் கி.பி. 1131 இல் பிறந்தவர் பசவர் ஆவார். அவர் வருணாசிரமக் கொள்கையுள்ள பெற்றோருக்குப் பிறந்தவராயினும் பூணூல் அணிவதை எட்டு வயதிலேயே மறுத்து விட்டார். வருணாசிரமத்தின் கொடிய வடிவமான தீண்டாமையை ஒழிக்கும் பிரசாரத்தை மேற்கொண்டார். சூத்திர வகுப்பு மக்களைத் திரட்டி அவர்களுக்கு “வீர சைவ” நெறிமுறைகளைப் புகட்டி வீர சைவர்களாக மாற்றினார்.

வருணாசிரமக் கொள்கை உடையவனாகவும், பிச்சல மன்னனின் அவைக்களப் புலவனாகவும், அரச குருவாகவும் விளங்கிய நாராயணகிரநிதன் என்பவனின் எதிர்ப்பை முறியடித்து, வருணாசிரம ஒழிப்புக் கொள்கையைப் பரப்பினார். பெண்கள் கல்வி கற்பது பாவம் என்கிற மனப்பான்மையைப் போக்கிப் பெண்கள் கல்வி பெற முயற்சித்தார்.

அவர் வாழ்ந்த காலம் 36 ஆண்டுகளேயாயினும் இன்றைக்கு 850 ஆண்டுகளுக்கு முன்னரே வருணாசிரம அமைப்பை எதிர்த்தவர் என்னும் பெருமைக்கு உரியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

### 2.4.2 கவிஞர் வேமனா (கி.பி, 15 ஆம் நூற்றாண்டு)

தெலுங்கு நாட்டில் கி.பி. 15 ஆம் நூற்றாண்டில் தோன்றியவராகக் கருதப்படுகிற வேமனா சிறந்த தெலுங்குக் கவிஞராகவும், சீரிய சிந்தனையாளராகவும் விளங்கினார். இரசவாதம் மூலம் மதிப்பற்ற உலோகங்களைப் பெருமதிப்புள்ள பொன்னாக மாற்ற முயற்சிப்பதை விட, விலங்கியல்பு படைத்த மனிதனை உயர்ந்த தன்மையுள்ளவனாக்குவது சிறந்தது என அவர் கூறினார்.

'கல்லிலும் செம்பிலுமோ இருப்பான் எங்கள் கண்நுதலே' எனத் தமிழ்ச் சித்தர்கள் பாடியதற்கொப்ப கல், மண், மரம் இவற்றினாலான சிலைகளில் கடவுள் இருக்க மாட்டான்; சுவர்களில் எழுதப்பட்ட ஓவியங்களில் இருக்க மாட்டான். எனவே, எந்த வடிவத்தில் உருவத்தை வணங்குவதும் கூடாது எனக் கூறிக் கண்டனம் செய்தார். பிராமணியத்தின் எல்லாக் கொள்கைகளையும் வன்மையாகக் கண்டித்தார். இந்துக்கள் வீடு பேறு அடைவதற்காகக் காசிக்குச் செல்லுவதைப் பற்றிக் கிண்டல் செய்தார்.

கவிஞர் வேமனாவின் பாடல்கள் 'பத்யமுல' (வேமன்ன பத்தியம்) என்கிற பெயரில் நூல் வடிவில் 1829–இல் முதல்முதலாக வெளிவந்தன. சீரிய சிந்தனையாளராகவும், பிராமணியத்தின் வைரியாகவும் விளங்கிய அவருடைய வரலாற்றையும், பெயரையும், புகழையும் திட்டமிட்டுப் பார்ப்பனர்கள் மறைத்து விட்டார்களென்று அறிஞர் உலகம் கருதுகிறது. வேமனா இந்திய நாட்டின் வால்டேர் ஆகக் கருதப்படுகிறார்.

### 2.4.3 இராசா ராம்மோகன் ராய் (1772 – 1833)

கி.பி. 1772–இல் இராசா ராம்மோகன் ராய் வங்காளத்தில் பிறந்தார். அவர் ஆங்கிலமும், சமஸ்கிருதமும் இந்துஸ்தானியும் கற்றவர்.

இராசா ராம்மோகன் ராய் தம் 16 ஆம் வயதிலேயே உருவ வழிபாட்டுக்கு எதிராக எழுதியமைக்காகத் தம் குடும்பத்திலிருந்து ஒதுக்கி வைக்கப்பட்டார். 1811–இல் அவருடைய அண்ணன் ஜகன் மோகன் ராய் மறைவுற்றார்.

அன்று நடப்பில் இருந்த வழக்கப்படி, அவருடைய அண்ணனின் மனைவி உடன்கட்டை ஏறி உயிரை மாய்த்துக் கொண்டார். நெஞ்சு பொறுக்காத அந்தக் கொடிய நிகழ்ச்சியை நேரில் கண்ணுற்ற இராசா ராம்மோகன் ராய் உடன்கட்டை ஏறும் பழக்கத்தை ஒழித்தே தீருவது என அப்போதே உறுதி பூண்டார்.

உடன்கட்டை ஏறுவதைக் கண்டனம் செய்து ஆங்கிலத்தில், 1818–இல் ஓர் அறிக்கையை அவர் வெளியிட்டார். 4.12.1829–இல் பிரிட்டிஷ் அரசினர் ஓர் ஒழுங்கு முறைச்சட்டத்தின் மூலம் உடன்கட்டை ஏறும் வழக்கத்தினைத் தடை செய்தனர். இந்த வருணாசிரமவாதிகளின் கொள்கைகளில் ஒன்றான உடன்கட்டை ஏறுதல் வழக்கத்தின் மீது விழுந்த முதலாவது அடி அதுவாகும்.

1814 முதல் 1830 வரையில் கல்கத்தாவில் வாழ்ந்த அவர், 'ஆத்மிய சபா' அல்லது 'நண்பர்கள் சங்கம்' என்கிற அமைப்பை 1815–இல் நிறுவினார். 1815 முதல் வேதாந்தம், கெனோ உபநிஷத், ஈஸோ உபநிஷத் முதலானவற்றை வங்காள மொழியிலும், இந்துஸ்தானியிலும், ஆங்கிலத்திலும் மொழி பெயர்த்து வெளியிடலானார்.

அதர்வண வேதத்திலும், இந்துச் சட்ட மிதாட்சரப் பிரிவிலும் சொல்லப்படுகிற பெண்கள் உடன்கட்டை ஏறுதலைத் தடுத்த அவர், வேதங்களைப் பரப்புவதில் மிகவும் அக்கறை எடுத்துக் கொண்டார்.

உடன்கட்டை ஏறும் வழக்கம் தடுத்து நிறுத்தப்படுவதற்கு 1772-லேயே பிரிட்டிஷ் ஆட்சியினர் முயற்சி எடுத்தனர். பின்னர் 1789 சனவரியிலும் முயற்சித்தனர். உடன்கட்டை ஏறும் நிகழ்ச்சிகளின் புள்ளி விவரங்களை 1815 முதலே பிரிட்டிஷ் அரசினர் தொடர்ந்து தொகுத்து வந்தனர்.

இந்தச் சூழலில்தான் 1811-இல் இராசா ராம்மோகன் ராய் மேற்கொண்ட உறுதிப்பாடு, 1829-இல் சட்ட வடிவம் பெறுவதில் முடிந்தது என்பது நினைவில் கொள்ளத்தக்கது.

இராசா ராம்மோகன் ராய், 1829-இல், "The Universal Religion : Religious Instructions founded on Sacred Authorities" (உலகமதம்: புனிதமான ஆதார நூல்களின் அடிப்படையிலான மத உபதேசங்கள்) என்னும் குறுநூலை வெளியிட்டார். இதில் இந்து மதத்தின் புனிதக் கோட்பாடுகளை மேற்கோள் காட்டி விவரித்திருந்தார்; ஓரிறைக் கொள்கையை வலியுறுத்தியிருந்தார். இதனை அடிப்படைக் கொள்கையாகக் கொண்ட பிரம்ம சபா அல்லது பிரம்ம சமாஜம் என்கிற அமைப்பை 23.11.1830-இல் தொடங்கினார்.

வேதங்கள் பரப்புவதில் மிகவும் அக்கறை எடுத்துக் கொண்டார்

இதற்கென நிறுவப்பட்ட ஓர் அறக்கட்டளை 20.08.1828-இல் அவரால் உருவாக்கப்பட்டிருந்தது.

பிரம்ம சமாஜத்தின் முதன்மையான கொள்கைகள், மேல் வருணத்தாரிடம் நிலவிய பெண்கள் உடன்கட்டை ஏறும் வழக்கத்தைத் தடுப்பதும், ஓரிறைக் கொள்கையை வலியுறுத்துவதும், வேதங்களை உயர்த்திப் பிடிப்பதுமேயாகும்.

இராம்மோகன் ராய் ஆங்கில முறைக் கல்வியை வலியுறுத்தியது குறிப்பிடத்தக்கதாகும்.

19.11.1830-இல் இங்கிலாந்துக்குப் பயணப்பட்ட அவர், 1833-இல், தம் 61-ஆம் அகவையில் இங்கிலாந்திலேயே மறைவுற்றார். ("Life and Letters of Raja Rammohan Roy" by Sophia Dobson Collet, Edited by Hem Chandra Sarkar, 1913).

### 2.4.4 அத்திப்பாக்கம் அ. வேங்கடாசல நாயக்கர் (1800 – 1897)

இந்து மத ஆசார ஆபாச தரிசினி என பெயர் வைத்தார்

வைகுண்டசாமி, வடலூர் வள்ளலார், மகாத்மா ஜோதிராவ் புலே ஆகியோருக்கு முன்னர், தமிழ்நாட்டில், செங்கற்பட்டு மாவட்டத்தில், சென்னையை அடுத்த அத்திப்பாக்கம் என்கிற ஊரில் 1800-இல் தோன்றிய அ. வேங்கடாசல நாயக்கர் சாதி மத, சாஸ்திர, புராண, மூடநம்பிக்கைகளையும், மூடச் சடங்குகளையும் பார்ப்பனப் புரோகிதத்தையும்; சோதிடம், சகுனம் பார்த்தல், பேய் ஓட்டுதல், பில்லி சூனியம் வைத்தல் முதலான காட்டுமிராண்டிப் பழக்கங்களையும் மிகக் கடுமையாகக் கண்டனம் செய்து 700 பாடல்களுக்கு மேல் யாத்தார். அவருடைய பாடல்களைத் திரட்டி, அவரே நூல் வடிவில் 1882-இல் வெளியிட்டார். அந்நூலில் பேசப்படும் கொள்கைகளைத் துலாம்பரமாகக் காட்டும் வண்ணம் அந்நூலுக்கு 'இந்து மத ஆசார ஆபாச தரிசினி' எனப் பெயரிட்டார். இவரைத் தமிழகத்தின் முதலாவது சமய, சமூக சீர்திருத்தக்காரராக நாம் கொள்ளலாம். தமிழிலும் ஆங்கிலத்திலும் புலமை பெற்ற அவர் சில ஆண்டுகள் பள்ளி ஆசிரியராகப் பணியாற்றினார். செங்கற்பட்டு மாவட்டத்தில் வன்னியர்கள் பெற்றிருந்த செழுமையான நிலங்களைப் பார்ப்பனரும் வேளாளரும் பிடுங்கிக் கொண்டதை எதிர்த்து 1860 முதல் 11 ஆண்டுக்காலம் பிரிட்டிஷ் அரசுடன் போராடினார்.

ஈ.வெ.இராமசாமி 1926 முதல் தாம் பரப்பத் தொடங்கிய மூட நம்பிக்கை ஒழிப்புக் கொள்கைகளை, தாம் இயக்கம் தொடங்குவதற்கு அய்ம்பது ஆண்டுகளுக்கு முன்னரே பரப்பிய சிறந்த அறிஞராக அ.வேங்கடாசல நாயக்கர் விளங்கியதை, 1930-இல் அறிய

ஊதுபத்தி, படையல் எதுவும் கிடையாது. ஒரு கண்ணாடியும் குத்துவிளக்கும் மட்டும் உண்டு. விளக்கை ஏற்றிவிட்டுக் கண்ணாடி முன் நின்று அனைவரும் வேற்றுமை இன்றித் தொழலாம்.

5. திருமணங்களில் மஞ்சள் கயிற்றால் தாலிகட்டுவதைத் தவிர்த்தார்.

6. பேய்–பிசாசு நம்பிக்கை, உருவ வழிபாடு, கோயில்களில் உயிர்ப் பலியிடுதல், பூசையின் பெயரால் சடங்குகள் செய்தல், காணிக்கை வசூலித்தல் ஆகியவற்றைக் கண்டனம் செய்தார்.

இவருடைய கொள்கை வழிப்பட்ட மக்கள் இவரை, 'வைகுண்டசாமி' என்று அழைத்தனர். அப்பெயரே நின்று நிலைபெற்றது.

இவருடைய கருத்துகள் எளிய பாடல் வடிவின.

*"ஆடுகிடாய் அறுத்துப் பலியிடார்கள்*
*மாடு மண்ணுருவை வணங்கித் திரியார்கள்"*
*காணிக்கை யிடாதுங்கோ, காவடி தூக்காதுங்கோ*
*வீணுக்குத் தேடுமுதல் விருதாய் போடாதுங்கோ"*

என்று நலிவடைந்த மக்களைப் பார்த்துக் கேட்டுக் கொண்டார்.

பெருவாரியான மக்களைத் தம்வழியில் இட்டுச் சென்றதால் இவர்மீது "அரசத் துரோகக்" குற்றச்சாட்டு சுமத்தப்பட்டது. திருவிதாங்கூர் மன்னரான சுவாதித் திருநாள் உத்தரவின்பேரில் வைகுண்டசாமி கைது செய்யப்பட்டுச் சிறையில் அடைக்கப்பட்டார். மக்கள் வெகுண்டெழுந்து போராடினர்; அவரை விடுதலை செய்யவேண்டுமென்று கோரினர். அதனால் அரசாங்கம் அவரை விடுதலை செய்தது.

வைகுண்டசாமி 1851–இல் இயற்கை எய்தினார். வைகுண்டசாமி சீர்திருத்த வீச்சு இன்னமும் கன்னியாகுமரி மாவட்டத்திலும், அதனை அடுத்த கேரளப் பகுதிகளிலும் காணப்படுகின்றது.

தமிழ்நாட்டில் தோன்றிய சமூக–சமுதாயப் புரட்சியாளர்களுள் காலத்தாலும் கருத்தாலும் அத்திப்பாக்கம் அ. வேங்கடாசல நாயக்கருக்கு அடுத்தவராகவும்; வடலூர் வள்ளலாருக்கும், கேரளத்து ஸ்ரீ நாராயண குருவுக்கும் முந்தியவராகவும் வைகுண்டசாமி விளங்கினார் என்பது அனைவரும் அறியத்தக்கது. (ஆதாரம் : நாஞ்சில், 1997 சிந்தனையாளன் பொங்கல் சிறப்பு மலர்)

### 2.4.5 சிதம்பரம் இராமலிங்க அடிகள் (1823–1874)

தமிழகத்தில் சிதம்பரத்தை அடுத்த மருதூரில் தோன்றி, சிதம்பரம் இராமலிங்கம் பிள்ளை என்று அழைக்கப்படுகிற வடலூர் வள்ளலாரின் பணி சாதி, மூட நம்பிக்கை எதிர்ப்பைப் பொறுத்த அளவில் குறிப்பிடத்தக்கதாகும்.

1823–இல் தோன்றிய அவர் ஒரே உலகம், ஒரே தெய்வம், ஒரே வழிபாடு எனும் கொள்கைகளை மக்களிடையே பரப்புவதை இடையறாது செய்து வந்தார். தொடக்கத்தில் சைவ சமயக் கோட்பாட்டினராக இருந்தவர், பின்னாளில் சன்மார்க்கக் கோட்பாட்டினராக மாறினார். சைவ சமயக் கடவுளர்களைப் போற்றியும் வியந்தும் நூற்றுக்கணக்கான பாடல்களைப் பாடியுள்ளார்.

அவர் முதற்கட்டத்தில் பாடிய ஐந்து திருமுறைகளிலும் இத்தகைய பாடல்களே அமைந்துள்ளன. ஆயினும் 1865–க்குப் பின்னர் அவர் புதிய அறிவொளியைப் பெற்றார்;

அதனை நடராசப் பெருமானே அளித்ததாகவும், அவர் நம்பினார். அதன்பின்னர் பின்வரும் தன்மையில் கருத்துகளை உரைக்கலானார்:

*"பன்னெறி சமயங்கள் மதங்க ளென்றிடு மோர்*
*பவனெறி இதுவரை பரவியது இதனால்*
*செந்நெறி அறிந்திலர் இறந்திறந் துலகோர்*
*செறியிருள் அடைந்தனர் ஆதலின் இனி நீ*
*புன்னெறி தவிர்த்தொரு பொதுநெறி யெனும் வான்*
*புத்தமு தருள்கின்ற சுத்தசன் மார்க்கத்*
*தன்னெறி செலுத்துக என்ற என் அரசே*
*தனி நடராச என் சற்குரு மணியே".*

என அவர் கூறியது கொண்டு நாம் இதை உணரலாம்.

*"வேதாகமங்களென்று வீண் வாத மாடுகின்றீர்*
*வேதாகமத்தின் விளைவறியீர் சூதாகச்*
*சொன்னவலால் உண்மை வெளிதோன்ற வுரைத்தலிலை*
*என்ன பயனோ இவை".*

என்றும் அவர் கூறியுள்ளார்.

இவற்றைக் கொண்டு தமிழகத்தில் ஆரியரின் நான்கு வேதங்களையும், சாதி அமைப்பையும், மூடப் பழக்கவழக்கங்களையும் 1865–க்கும் 1872–க்கும் இடையில் எதிர்த்துக் குரல் கொடுத்த சமய சீர்திருத்தக்காரர் வடலூர் வள்ளலார் ஆவார் என நாம் உறுதியாகக் கூறலாம்.

### 2.4.6 சுவாமி தயானந்த சரசுவதி (1824–1883)

குஜராத் பகுதியில் கத்தியவார் சிற்றரசில் மோர்வி என்னும் ஊரில் 1824 இல் தயானந்த சரசுவதி பிறந்தார். அவருடைய குடும்பத்தார் உயர்நிலை பிராமண வகுப்பைச் சார்ந்தவர்கள். தயானந்தருக்குப் பெற்றோர் இட்ட பெயர் மூல் சங்கர் என்கிற் தயா ராம் ஆகும். அவருடைய தந்தையார் வேதங்களை நன்கு கற்றவர். எனவே தந்தையாரிடமிருந்தே ஓரளவு வேத, சாஸ்திரக் கல்வியை அவர் பெற்றார்.

தயானந்தரின் 14–ஆம் வயதில் 1838– இல் அவருடைய ஊரின் சிவன்கோவிலில் சிவராத்திரி பூசை நிகழ்ச்சி நடந்தது. சிவனுடைய வடிவத்துக்கு பூசனை செய்து இரவு முழுவதும் நோன்பு நோற்றலே அந்நிகழ்ச்சியாகும். அந்நோன்பை மூல் சங்கர் மேற்கொண்டார். அப்போது சிவன் உருவச்சிலையின் மீது சுண்டெலிகள் ஊர்ந்து சென்றதை அவர் பார்த்தார். அவை பின்னர் கீழே இறங்கி வந்து, அங்குப் படையல் செய்து வைக்கப்பட்டிருந்த பண்டங்களை முன்னம்பற்களால் மேலோடு கொறித்ததையும், சிலையைச் சுரண்டியதையும் கண்டார். இவ்வளவு நடந்த பிறகும் அந்த உருவச்சிலை அசையவில்லை. அசைவில்லாத அந்த சிலைக்கு உயிரில்லை; அதில் எல்லாம் வல்ல கடவுள் இருக்க முடியாது; அதை இனிமேல் வணங்குவதில்லை என வெறுத்து வீட்டுக்குத் திரும்பினார்; நோன்பைக் கைவிட்டார். அன்று முதல் சிலை வணக்கத்தைத் தவிர்த்தார். அது பற்றித் தம் தந்தையார் சொன்ன விளக்கங்களை அவர் ஏற்க மறுத்தார். அதனால் தந்தைக்கும் அவருக்கும் பிணக்கு ஏற்பட்டது. இருப்பினும் சாம வேத வைதிக பிராமணக் குடும்பத்தைச் சேர்ந்த அவர் 14 வயதிற்குள் சாமவேதம் முழுவதையும் மனப்பாடம் செய்திருந்தார். 19–ஆம் வயதில் அவருக்கு மணம் முடிக்கப் பெற்றோர்

ஏற்பாடு செய்தனர். மணம் செய்து கொள்ள விரும்பாத அவர், திருமண நாளுக்குச் சில நாள்கள் முன்பு வீட்டை விட்டு வெளியேறினார்.

சுவாமி விர்ஜானந்த சரஸ்வதி என்பாரைக் குருவாகக் கொண்டு வேதம், சாஸ்திரம் முதலானவற்றைக் கற்றார். 1845–இல் தம் குறிக்கோள் என்ன என்பதை உணர்ந்தார். இந்தியாவில் பல மாகாணங்களில் பயணம் செய்தார். சென்னை மாகாணம் தவிர.

அவர் வெளியிட்ட கொள்கைகளுள் முதன்மையானவை உருவ வணக்க ஒழிப்பு, மூடநம்பிக்கை ஒழிப்பு, அற்பச் சடங்குகள் மறுப்பு, பெண்களுக்குச் சம உரிமை என்பவையாகும். அத்துடன் புராணக் கதைகள் கற்பனையானவை, பொய்யானவை என்றும்; சாதி வேற்றுமை கூடாது என்றும்; பல கடவுள்கள் வணக்கம் தவறானது என்றும் எடுத்துரைத்தார்

முடிவாக ஒரே கடவுள்தான் உண்டு என்றும், அவரே வேதங்களைப் படைத்தார் என்றும், வேதங்களைப் பயிலுவதே அவரைத் தொழுவதற்கான வழியாகுமென்றும், தீயை வணங்குவதே கடவுள் வணக்கம் ஆகும் என்றும் எடுத்துரைத்தார்.

கடவுள் அவதாரங்களை எடுத்ததாகக் கூறுவது தவறு என்று அவர் கூறினார். பிரம்மா, சிவன், விஷ்ணு முதலானவர்கள் கடவுளர் அல்லர்; கடவுள் அவதாரங்களும் அல்லர்; கடவுளால் படைக்கப்பட்ட தேவதைகள் என உறுதிபடச் சொன்னார்.

இந்து மதத்தில் அவதாரங்கள் இல்லை என்பது போலவே கிறித்துவ சமயத்திலும் அவதாரங்கள் இல்லை எனத் தெளிவுபடக் கூறினார்.

வருண அமைப்பு என்பது அன்று அரசர்களால் அல்லது அரசினால் தொழில் அடிப்படையில் செயற்கையாக வகுக்கப்பட்டதேயன்றி இயற்கையாகக் கடவுளால் உண்டாக்கப்பட்டது அன்று என அவர் விளக்கமளித்தார்.

அவருடைய வாழ்க்கையில் நடந்த மிகவும் புகழ் பெற்ற நிகழ்ச்சி, காசியில் 17–11–1869–இல் உருவ வழிபாடு சரியா, தவறா என்பதைப் பற்றி நடைபெற்ற வாக்குவாதமேயாகும். அப்போது காசியை ஆண்ட அரசனின் முன்னிலையில், 300 வேதப் பண்டிதர்கள் ஒரு கட்சியாகவும், தயானந்தர் மட்டும் ஒரு கட்சியாகவுமிருந்து வாதிட்டனர். "புராணம்" என்கிற சொல்லைப் பற்றி இரு தரப்பாருக்கும் ஏற்பட்ட வாக்குவாதத்தில், தயானந்த சரஸ்வதி தோல்வி பெற்றதாக அரசனால் அறிவிக்கப்பட்டது. இருப்பினும் புராணம் என்பது பிற்காலத்தது என்றும், அதில் சொல்லப்பட்டுள்ள உருவ வணக்கத்தை ஏற்க முடியாது என்றும் தயானந்த சரஸ்வதி தெளிவாக அறிவித்தார்.

அவருடைய கொள்கைகளைப் பரப்புவதற்கென 10–4–1873–இல் "ஆரிய சமாஜம்" என்கிற அமைப்பைப் பம்பாயில் நிறுவினார். 1877 முதல் 1883 வரையில் நாட்டின் பல பகுதிகளுக்கும் சென்று ஆரிய சமாஜக் கொள்கைகளைப் பரப்பினார். பலருக்கும் அக்கொள்கைகளை அவரே பயிற்றுவித்தார்.

அவருக்குத் தீங்கு செய்ய நினைத்தவர்களால் உணவிலோ, மருந்திலோ கலந்து தரப்பட்ட நஞ்சு காரணமாக நோய் வாய்ப்பட்ட அவர் 30–10 1883 அஜ்மீரில் இறந்தார்.

சுவாமி தயானந்தர் சிறந்த இந்திய தேசியவாதியாகவும் விளங்கினார் என்பது நாம் அறியத்தக்கது. "தன்னாட்சி என்பதற்கு ஒரு மாற்றாக நல்ல ஆட்சி என்பது இருக்க முடியாது என, 1875–இல் தெளிவுபடக் கூறினார். அவர் தம் கொள்கைகளைப் பற்றி சமஸ்கிருதத்திலும், இந்தியிலும் நூல்களை எழுதியுள்ளார்.

இந்திய சமுதாய மறுமலர்ச்சி வரலாற்றில் இராசாராம்மோகன்ராய்க்கு அடுத்தபடியாகச் சிறப்பிக்கப்பட்டவர் தயானந்த சரஸ்வதி அவர்களே ஆவார்.

## ஜோதிராவ் கோவிந்தராவ் புலே (1827–1890)

வடலூர் வள்ளலாருக்கும், ஆ.வேங்கடாசல நாயக்கருக்கும் சமகாலத்திலும், இன்றைய மராட்டிய மாநிலத்திலுள்ள புனேயில் 1827 இல் தோன்றிய ஜோதிராவ் புலே மிகப் பெரும் சமூகப் புரட்சியாளராகத் திகழ்ந்தார். அவர் நால் வருண அமைப்பை வன்மையாக எதிர்த்தார். தாழ்த்தப்பட்ட சாதி மக்களுக்கும், சூத்திர வகுப்பு மக்களுக்கும், பெண்களுக்கும் கல்வி அளிப்பதை ஓர் அரிய பணியாக மேற்கொண்டார்.

1873 செப்டம்பர் 24–இல் சத்திய சோதக் சமாஜம் (உண்மை நாடுவோர் சங்கம்) என்னும் அமைப்பை நிறுவினார். அந்த அமைப்பின் நோக்கங்கள் சூத்திரரையும், ஆதி சூத்திரரையும் சமூக அடிமைத் தனத்திலிருந்து விடுவிப்பதும், அவர்களைப் பார்ப்பனச் சுரண்டலிலிருந்து விடுவிப்பதும் ஆகும்.

ஆரியர்கள் ஈரானிலிருந்து இங்கு நுழைந்தவர்கள் என்னும் கருத்தை உறுதிப்பட அவர் வெளியிட்டார்.

இந்த மண்ணுக்குச் சொந்தக்காரர்களாக உள்ள மக்களுக்கு அரசுப் பதவிகளில் இடம் தரப்பட வேண்டும் என பிரிட்டிஷாரிடம் கோரினார்.

இந்தியாவிலுள்ள ஒடுக்கப்பட்ட வகுப்பு மக்களின் ஒட்டுமொத்த சமூக, அரசியல், பொருளாதார விடுதலைக்குப் பாடுபட்ட முதலாவது சமூகப் புரட்சியாளராக நாம் அவரைக் கருதலாம்.

மகாத்மா புலே ஓரிறைக் கொள்கையில் நம்பிக்கை உள்ளவராகத் திகழ்ந்தார். ஆனாலும், உருவ வணக்கத்தை வெறுத்தார்; கடவுள் வழிபாட்டுக்குப் பார்ப்பனர் இடைத்தரகர்களாக இருப்பதை எதிர்த்தார்; பார்பனப் புரோகிதத்தை விலக்கிவிட்டுப் பார்ப்பனரும், பார்ப்பனியச் சடங்குகளும், சமஸ்கிருத மந்திரங்களும் அற்ற திருமணங்களை அவரே முன்னின்று நடத்தி வைத்தார். அதன் காரணமாக மராட்டியத்தில் பார்ப்பனப் புரோகிதம் ஒழிந்த திருமண முறையை முதன்முதல் தொடங்கி வைத்தவராக அவர் விளங்குகிறார்.

பின்னாளில் கோல்கப்பூர் சிற்றரசர் சாகு சத்ரபதி பெரியார் ஈ.வெ. இராமசாமி, பி. ஆர். அம்பேத்கர் ஆகியோர் அவரைப் பாராட்டினர்; அவருடைய கொள்கைகளைத் தூக்கிப் பிடித்தனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

## இராமகிருஷ்ணர் (1836–1886)

இராமகிருஷ்ண பரமஹம்சர் என அறியப்பட்டுள்ள கதாதரன் 1836 பிப்ரவரி 18இல் வங்காளத்தில் பிறந்தார். அவருடைய பெற்றோர் காமர்புக்குர் வைதிக பிராமண வகுப்பைச் சேர்ந்தோர் ஆவர். அச்சமயத்தில் ராணி ரஷ்மாணி என்பவரால் தட்சணேசுவரத்தில் காளி கோவில் ஒன்று நிறுவப்பட்டது. அக்கோயிலின் அர்ச்சகராக கதாதரின் அண்ணன் ராம் குமார் அமர்த்தப்பட்டார். ராம் குமார் இறந்தவுடன் கடாதர் அர்ச்சகராக அமர்ந்தார். அவர் அடிக்கடி அங்கேயே தியானத்தில் ஈடுபடுவார். விரைவில் தட்சணேசுவர முனிவர் என்கிற பெருமையை அவர் பெற்றார். பிரம்ம சமாஜத் தலைவர்களான கேசவ சந்திர சென் முதலானோரும் மற்றும் பலரும் அவரை நாடி வந்தனர். அவ்வாறு அவரிடம் வந்தவர்களுள் குறிப்பிடத்தக்கவர் நரேந்திரன் எனப்படும் விவேகானந்தர் ஆவர்.

## பண்டிதர் க. அயோத்திதாசர் (1845–1914)

பண்டிதர் க. அயோத்திதாசர் 1845–இல் சென்னை ஆயிரம் விளக்கு மக்கிமா நகரில் பிறந்தார்; தேனாம்பேட்டையில் கல்வி பயின்றார். நீலகிரியில் குடியேறிய அவர் பிற்காலத்தில் சென்னை இராயப்பேட்டைக்குக் குடி பெயர்ந்தார். அவர் தமிழையும்

பவுத்தக் கோட்பாட்டைப் பின்பற்றித் திருக்குறளைத் 'திரிகுறள்' என்றும், திருவாசகத்தைத் 'திரிவாசகம்' என்றும் அழைத்தார். திருக்குறளின் பல அதிகாரங்களுக்கு அவரே உரை எழுதினார். திருவள்ளுவர் பார்ப்பானுக்கும் பறைச்சிக்கும் பிறந்தவர் என்கின்ற பார்ப்பனர்களின் கட்டுக்கதையை முதன்முதலில் கண்டனம் செய்தவர் அயோத்திதாசரே ஆவார்.

இந்திய தேசம் என்பதை "இந்திரர் தேசம்" என்றும்; ஆரியர்கள் 'மிலேச்சர்' களென்றும், தம் காலத்தில் தாம் கண்ட பிராமணர்களை 'வேஷ பிராமணர்கள்' என்றும் முதன் முதலாக அழைத்தவர் அப்பெருமகனாரேயாவார்.

பவுத்த மார்க்கத்தைத் தழுவிய அரசர்கள் மற்றும் பாண்டிய அரசர்கள் காலம் முதல் மருதனார், பெருந்தேவனார், சாத்தனார், திருத்தக்கர் ஈறாக உள்ள குடிகள் யாவரும் தங்கள் தங்கள் பெயர்களின் ஈற்றில் அய்யர், ராவ், முதலி, நாயுடு, செட்டி எனும் தொடர் மொழிகள் யாதொன்றும் சேர்த்து வந்தது கிடையாது என அவர் குறிப்பிட்டுள்ளது நாம் அறிய வேண்டிய முதன்மையான செய்தியாகும்.

சாதி ஆசாரம், மூட நம்பிக்கை இவற்றைக் கண்டித்ததோடு பகுத்தறிவு கொண்டு சிந்திக்க வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தினார்.

அத்திப்பாக்கம் அ. வேங்கடாசல நாயக்கரை அடுத்து இந்து மத ஆசாரத்தையும் மூட நம்பிக்கையையும் கடுமையாகக் கண்டனம் செய்தவர் அயோத்திதாசரே ஆவார். அப்பெருமகனார் 1914 – இல் சென்னையில் மறைவுற்றார். ("அயோத்திதாசர் சிந்தனைகள்" தொகுப்பாசிரியர்; ஞான அலாய்சியஸ் ; வெளியீடு : நாட்டார் வழக்காற்றியல் ஆய்வு மையம், பாளையங்கோட்டை 627 002, 1999)

**பு. முனுசாமி நாயக்கர்**

கி.பி. 1878 வாக்கில் சென்னையில் 'இந்து சுயசிந்தனை சங்கம் என்கிற பெயரில் ஓர் அமைப்பு இயங்கியது. இச்சங்கத்தார் 'தத்துவ விசாரிணி' என்ற ஒரு தமிழ் வார ஏட்டை 1878 – இல் வெளியிட்டனர். 1882 – இல் "தத்துவ விசாரிணி" என்ற பெயரை மாற்றி, "தத்துவ விவேசினி" என்னும் பெயரில் தொடர்ந்து வெளியிட்டனர். அதே சமயத்தில் * என்னும் ஆங்கில வார ஏடு ஒன்றினையும் அச்சங்கத்தாரே வெளியிட்டுள்ளனர். இவ்விரண்டு ஏடுகளின் 1882, 1883, 1884, 1885 ஆம் ஆண்டைய மூலப்படிகள் பல நமக்குக் கிடைத்துள்ளன. இந்த இரண்டு ஏடுகளிலும் மூட நம்பிக்கைகளுக்கு எதிராகவும், பெண் கல்வியை வலியுறுத்தியும், கைம்பெண் மறுமணத்தை ஆதரித்தும் பலகட்டுரைகளும் ஆய்வுரைகளும் வெளியாகியுள்ளன.

அத்துடன் இந்து – கிறித்துவ மதங்களின் கோட்பாடுகளை எதிர்த்தும், வருண வேறுபாட்டை எதிர்த்தும் தொடர்ந்து கட்டுரைகள் எழுதப்பட்டுள்ளன.

'கடவுள் உண்டு' என்கிற கொள்கையை மறுத்துக் 'கடவுள் இல்லை' என்பதற்கான காரணங்களை நிரல்படுத்தி எழுதி, கடவுள் மறுப்புக் கொள்கையைத் தமிழகத்தில் முதன்முதலாகப் பரப்பிய ஏடுகள் இவ்விரண்டுமேயாகும்.

கடவுள் மறுப்புக் கொள்கையைப் பொதுமக்களுக்கும் புரிய வைக்கின்ற தன்மையில் உரையாடல் வடிவத்தில் 'ஆஸ்திக – நாஸ்திக சம்வாதம்' என்கிற தலைப்பின் கீழ் ஒரு நீண்ட கட்டுரை பல வாரங்கள் 'தத்துவ விவேசினி' ஏட்டில் வெளியிடப்பட்டுள்ளது.

இவ்விரண்டு ஏடுகளையும் அச்சிட்டு வெளியிடுபவராகவும், இவ்வேடுகளின் பொறுப்பாளராகவும் விளங்கியவர் புமுனுசாமி நாயக்கர் ஆவார். அவரைப் பற்றிய மற்ற விவரங்கள் இன்றுவரை கிடைக்கவில்லை. ஆயினும் அவர் அ. வேங்கடாசல நாயக்கரின் சமகாலத்தவராகவும், அவருடைய உற்ற நண்பராகவும் விளங்கினார் என்பதற்குத்

'தத்துவ விவேசினி' ஏட்டிலும் 'இந்துமத ஆசார ஆபாச தரிசினி' (1882) என்னும் பாடல் நூலிலும் போதிய சான்றுகள் உள்ளன.

அ. வேங்கடாசல நாயக்கர் வெளியிட்ட "இந்துமத ஆசார ஆபாச தரிசினி" என்ற நூலுக்கு பு. முனுசாமி நாயக்கர் ஒரு சாற்றுக்கவி வழங்கியுள்ளார்.

மேலும் அ. வேங்கடாசல நாயக்கர் எழுதிய கட்டுரைகளை 4–2–1883 முதல் 4–11–1883 வரையில் 'தத்துவ விவேசினி' ஏட்டில் தொடர்ந்து வெளியிட்டுள்ளார்.

இந்தியாவின் வேறு எந்தப் பகுதியிலாயினும் கடவுள் மறுப்புக் கொள்கையைப் பரப்பும் நோக்குடன் வேறு இந்திய மொழியிலோ, ஆங்கிலத்திலோ ஏடுகளோ, நூல்களோ 1885–க்கு முன்னர் வெளி வந்துள்ளனவா என்பது ஆய்தற்கு உரியது.

## வீரேசலிங்கம் பந்தலு (1849–1919)

தெலுங்கு நாட்டில் ராஜ மகேந்திரத்தில் 1849 இல் தோன்றியவர் வீரேசலிங்கம் பந்தலு ஆவார். இளமை தொட்டே அவர் ஓலைச் சுவடிகளில் உள்ள நூல்களைத் தேடிப் படிப்பதில் ஆர்வம் கொண்டிருந்தார். 1872–இல் ஆசிரியப் பணியில் அமர்ந்தார்.

பிராமண வகுப்பில் பிறந்த அவர், உருவ வணக்கத்தைக் கைவிடுவது, பிசாசுகள் – பேய்கள் ஆகியவை பற்றிய மூட நம்பிக்கைகளை விலக்குவது, பெண்களுக்குக் கல்வி கோரி வாதிடுவது, பெண்கள் சதிர் ஆடுவதை ஒழிப்பது, தீண்டப்படாதவர்கட்குச் சமஉரிமை வழங்குவது, உயர்சாதி மக்கள் என்போரிடம் மன மாற்றத்தை ஏற்படுத்துவது முதலான சீர்திருத்தப் பணிகளில் தீவிரமாக ஈடுபட்டார். அவருடைய போராட்டங்களில் மிகவும் குறிப்பிடத்தக்கவை.

பெண்களுக்குக் கல்வி உரிமை பெறுவதும், கைம்பெண்களை மறுமணம் செய்துதர வேண்டும் என்பதை நிலைநாட்டுவதுமேயாகும். அவர் நிகழ்த்திய முதலாவது கைம்பெண் மறுமணம் 11–12–1881–இல் நடைபெற்றது. 1882–லும் இவ்வாறு சில திருமணங்களை அவர் நிகழ்த்தினார். அவர் 1878–இல் வெளியிட்ட 'இராஜசேகர சரித்திரம்' என்ற புதினத்தின் உருவாக்கத்தைக் கொண்டு 'தெலுங்குப் புதினத்தின் தந்தை' எனக் கருதப்படுகிறார். ஆஸ்துமா நோய்க்கு ஆட்பட்ட அவர் 1919 இல் முடிவெய்தினார்.

## ஸ்ரீ நாராயண குரு (1855– 1928)

இந்தியா முழுவதிலும் உள்ள இந்துக்கள் எனப்படுவோரில் பார்ப்பனர் அல்லாதார் அனைவரும் வருணாசிரமக் கொடுமைகட்கு ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக ஆளாகியிருக்கிறார்கள் என்பது அனைவருக்கும் தெரிந்த ஒன்றாகும். ஆனால் மலையாள நாட்டில் நடப்பில் இருந்த வருணாசிரம முறை மிகவும் கொடூரமான வடிவிலிருந்தது. இந்தியா முழுவதிலும் தொட்டால் தீட்டு என்கிற வடிவில் தீண்டாமை ஆதிச் சூத்திரர்களின் பேரில் கையாளப்பட்டது. ஆனால் மலையாள நாட்டில் தீண்டாமை அண்டாமை காணாமை என்கிற கொடூர வடிவங்களில் தீண்டாமை செயல்படுத்தப்பட்டது.

தீண்டப்படாத மக்களை 'இராட்சத கணங்கள்' என்றே மலையாள நாட்டு நம்பூதிரிப் பார்ப்பனர்கள் கருதினர்; அவர்களுக்குக் கொடுமைகளை இழைத்தனர். இத்துணை வருணக் கொடுமைகள் தாண்டவமாடிய கேரளத்தில், திருவனந்தபுரம் மாவட்டத்தில் 1855 ஆகஸ்டு 28–இல் தோன்றியவர் ஸ்ரீ நாராயண குரு ஆவார். நாராயண குரு தமிழிலும், மலையாளத்திலும் புலமை பெற்றிருந்தார்.

கேரளத்துப் பார்ப்பனர்கள் அரசுக்கு எவ்வித வரியும் செலுத்த வேண்டியதில்லை. ஆனால் தீண்டப்படாத வகுப்புப் பெண்கள் முலைவரியும், தலைவரியும் கொடுக்க

இன்றைக்கு ஆயிரத்து இருநூறு ஆண்டுகளுக்கு முன் ஆதிசங்கரர் சொன்ன அதே செய்திகளைத்தான் விவேகானந்தர் கூறினார். இவற்றைக் கொண்டுதான் விவேகானந்தர் இந்து மதத்திற்குப் புத்துயிர் அளித்தவர் எனக் கருதப்படுகிறார். இது இந்துசமய மறுமலர்ச்சிக் கொள்கை என்று சொல்வதற்குத் தகுதி உள்ளதா என்பது ஆய்வுக்குரியது.

## டாக்டர் அப்ரகாம் தாமஸ் கோவூர் (1898 – 1978)

சாயிபாபாக்களையும், சாமியார்களையும், ஆவியுலக இடைத் தரகர்களையும் அறைகூவி அழைத்தவர் அப்ரகாம் தாமஸ் கோவூர். இவர் ஏ.டி. கோவூர் என அழைக்கப்பட்டார்.

1898–ஆம் ஆண்டு ஏப்ரல் 10–ஆம் நாள் கேரளாவில் அய்புதோமா கத்தனார் என்பவரின் மகனாக அப்ரகாம் டி. கோவூர் பிறந்தார். இவருடைய பெற்றோர்கள் கிறித்துவ சமயத்தில் ஆழ்ந்த நம்பிக்கை கொண்டவர்கள். கல்வி அறிவிற் சிறந்து விளங்கியது அவர்களுடைய குடும்பம்.

தொடக்கப் பள்ளியில் சேர்க்கப்பட்ட கோவூர், அங்குகூட உயர்சாதி இந்து ஆசிரியர்கள், தாழ்த்தப்பட்ட பிரிவு இந்து மாணவர்களைச் சாதி வித்தியாசம் பார்த்து நடத்துவதைக் கண்டு மனம் நொந்தார். தீண்டாமை எல்லா இடங்களிலும் கொடூரமான முறையில் அனுசரிக்கப்பட்ட காலமது. சிறு வயதிலேயே குறும்புத்தனமான முறையில் தீண்டாமைக்கெதிரான போராட்டங்களைக் கோவூர் தொடங்கினார்.

கேரளாவில் பள்ளிப் படிப்பை முடித்த கோவூர் இடைநிலை வகுப்பில் படிக்க கல்கத்தாவில் செராம்பூர் பகுதியில் உள்ள கிறித்துவக் கல்லூரிக்கு அனுப்பி வைக்கப்பட்டார்; படிப்பில் முதல் வகுப்பில் தேறினார்.

பின்னர் தாவரவியலில் பட்டப்படிப்பை கல்கத்தாவிலுள்ள பங்கபாசி கல்லூரியில் தொடங்கினார். இந்தக் கல்லூரியில் பயின்றபோதுதான் அவர் கல்கத்தா பல்கலைக்கழகத்தில் உள்ள நூலகத்தில் நிறையப் படித்துப் பல செய்திகளைப்பற்றியும் ஆராயும் அறிவை வளர்த்துக் கொண்டார். கல்கத்தாவில் அன்று நிலவிய அரசியல், சமுதாயச் சூழ்நிலைகளும் இந்த அறிவு தேடலுக்குத் துணையாக இருந்தன. இந்தச் சமயத்தில்தான் அவர் முழுமையான நாத்திகரானார்.

கல்கத்தாவில் நாள்தோறும் 16 மணி நேரத்திற்குக் குறையாமல் படித்து வந்ததால் அவர் உடல் நலிவுற்றது. சிகிச்சையளித்த மருத்துவர் நோய்தீர ஏசுவிடம் பிரார்த்தனை செய்யும்படிச் சொன்னார். "பிரார்த்தனையால் நோய் குணமாகுமென்றால் மருத்துவமனைகள் தேவையில்லையே" என்று கூறிய கோவூர், பிரார்த்தனை செய்ய மறுத்துவிட்டார்.

கல்லூரிப் படிப்பு முடிந்து வந்த கோவூர் 26–ஆம் வயதில் திருமணம் செய்து கொண்டார். அந்தக் காலத்தில் திருமணத்திற்கு முன்பு ஆணும் பெண்ணும் நேரில் பார்த்துக் கொள்ள அனுமதிக்கப்படுவதில்லை. என்றாலும் கோவூர் இதில் விடாப்பிடியாய் இருந்தார். மேலும், மணப்பெண்ணிடம் நேரில் பேசும்போது அதிகக் குழந்தைகளைப் பெற்றுக் கொள்ளக்கூடாது, குழந்தைகளுக்கு மதத்தைப் போதிக்கக்கூடாது, திருமணத்திற்குப்பின் ஒன்றாய் வாழ விருப்பமில்லாது போனால் பிரிந்து வாழுவோம் என்பன போன்றவற்றைக் கூறினார். அந்தக் காலத்தில் இவை மிக மிகப் புரட்சியானவை. இதனை ஏற்றுக் கொண்ட குஞ்ஞும்மையை 1924–இல் கோவூர் திருமணம் செய்து கொண்டார். அவர்கட்கு ஒரே மகன். அவர்களுடைய குடும்ப வாழ்க்கை பாவேந்தர் கூறியதுபோல் 'ஒரு பல்கலைக் கழகமாகத்' திகழ்ந்தது.

கருவுற்ற காலத்திலும் பேறுகாலத்திலும் குழந்தை பிறந்த பின்னரும் வேண்டிய உதவிகளைச் செய்தார்.

கோரா நாத்திகத்திற்காக ஏற்றுக்கொண்ட இன்னல்கள் அளவிட முடியாதவை. பெற்றோரால் வீட்டைவிட்டு வெளியேற்றப்பட்ட கோரா இரண்டு முறை வேலை நீக்கம் செய்யப்பட்டார்.

"கடவுள் நம்பிக்கை ஒரு பொய்மை" என்னும் கருத்துடன் கட்டுரை எழுதியதற்காக் பித்தாபுரம் மன்னர் கல்லூரி இவரை வேலை நீக்கம் செய்தது. பின்னர் வேலை அளித்த மசூலிப்பட்டினம் இந்துக் கல்லூரி, அக்கல்லூரியில் நடைபெற்ற மாணவர்களின் வேலை நிறுத்தத்திற்கு இவரைக் காரணமாக்கி வேலை நீக்கம் செய்தது. சம்பளப் பணி சுதந்திரச் சிந்தனைக்கும், செயலுக்கும், நாத்திக வாழ்க்கை முறைக்கும் உடன்பட்டு வராது என்ற தெளிவு பெற்றார். பொதுமக்களிடம் நன்கொடையைப் பெற்று மக்களுக்குத் தொண்டாற்ற முடிவு செய்தார்.

கோரா காந்தியாருடன் சேர்ந்து செயல்பட்டார். சேவா கிராமத்தில் காந்தியாருடன் தங்கிய நாள்களில் இவரும், இவருடைய மனைவி, குழந்தைகள், தோழர்கள் அனைவரும் சேவாக்கிராம ஆசிரமத்தில் வழிபாட்டில் கலந்து கொள்ளுவதில்லை. சேவாக்கிராம ஆசிரமத்தில் கோராவின் மூத்த மகள் மனோரமாவுக்கும், தீண்டப்படாத வகுப்பு மணமகனுக்கும் திருமணம் நடந்தது. அந்தத் திருமண உறுதிமொழியில் 'உண்மை' என்று குறிப்பிடவும் காந்தியார் சம்மதித்தார். கோராவின் நாத்திக வாழ்க்கை முறைக்குக் காந்தி அளித்த மதிப்புக்கு இது ஓர் எடுத்துக்காட்டாகும்.

கோரா தன்னுடைய சிந்தனைக்கும் செயலுக்கும் துணையாகப் பல ஏடுகள் நடத்தினார். "சங்கம்", "ஆர்த்திக் சமதா" (பொருளியல் சமத்துவம்) ஆகிய பெயர்களில் தெலுங்கிலும், "இன்சான்" (மாந்தன்) என்ற பெயரில் இந்தியிலும் ஏடுகள் நடத்தினார். தி எதிஸ்ட் 'நாத்திகன்' என்ற பெயரில் அவர் தொடங்கி நடத்திய ஆங்கில மாத ஏடு இன்றும் அவருடைய குடும்பத்தினரால் நடத்தப்பட்டு வருகிறது.

கோரா ஆங்கிலத்தில் தன் வரலாற்றை எழுதினார். இந்நூலுக்கு 'நாங்கள் நாத்திகரானோம்' என்று பெயரிட்டார். மாந்தத் தன்மையுடன் வாழ விரும்பும் ஒவ்வொருவரும் கட்டாயம் படிக்க வேண்டிய நூல் இது.

விஜயவாடாவில் நடந்த பொதுக்கூட்டத்தில் "ஒன்றில் நாட்டுப்புற இந்தியாவில் சமுதாய மாற்றம்" என்னும் தலைப்பில் 1975–ஆம் ஆண்டு சூலை 26–ஆம் நாள் கோரா பேசிக்கொண்டிருந்தார். பேசிக் கொண்டிருக்கும் மூளைக்குருதிக் குழாய் வெடித்து அவர் இறந்தார்.

கோராவின் உடலை என்ன செய்வது? அவருடைய மக்களும் அன்பர்களும் இதைப்பற்றிச் சிந்தித்தனர். சம்பிரதாயப்படி அவருடைய உடலைத் தொடுவதற்கும் கொள்ளி வைப்பதற்கும் அவருடைய மக்களுக்கு மட்டுமே உரிமை உண்டு. இதற்கு மாறாக, சமுதாயப் புரட்சிக்கு எடுத்துக்காட்டாக இந்த நிகழ்ச்சி நடத்த வேண்டும் என்று முடிவு செய்தனர். அதன்படி தீண்டப்படாத வகுப்புத் தோழர் சத்தியானந்தம் கோராவின் உடலுக்குத் தீ மூட்டினார்.

கோரா நாத்திகராக வாழ்ந்து நாத்திகராகவே மறைந்தார். அவருடைய மனைவி சரசுவதியும் நாத்திகரே. எனவே அவர்களுடைய குழந்தைகளும், நாத்திகச் சூழலிலேயே வளர்ந்தனர். இளமையில் வளர்ப்பின் மூலமாகவும் வளர்ந்தபின் அவற்றைப் புரிந்து கொண்டும் நாத்திகத்தைப் பின்பற்றினார்கள். அவருடைய மனைவியும் மக்களும் அவர் வழியில் அவர் அமைத்த மய்யத்தின் மூலம் மக்களுக்குத் தொடர்ந்து தொண்டாற்றி வருகின்றனர்.

(ஆதாரம் : கோராவின் தன்வரலாறு : "நாங்கள் நாத்திகரானோம்" தமிழாக்கம் : கசைம் 1986 புதுவாழ்வுப் பதிப்பகம், சென்னை – 2)

தன்மதிப்பீட்டு வினாக்கள்

1. கவிஞர் வேமனா எம்மொழிக் கவிஞர்?
2. இராசாராம் மோகன் ராய் மேற்கொண்ட தலையாய சீர்திருத்தம் எது?
3. அத்திப்பாக்கம் அ. வேங்கடாசல நாயக்கரின் அரிய பணிகள் யாவை?
4. இராமலிங்க அடிகளாரின் சமயப்பணி யாது?

## 2.5 பாடத் தொகுப்புரை

- புத்தருக்குப் பிறகு வருண அமைப்பைப் பலர் எதிர்த்தனர். அவ்வகையில் தெலுங்கு நாட்டினரான பசவர் பூணூல் அணிவதை மறுத்து வருணாசிரம ஒழிப்புக் கொள்கையைப் பரப்பினர்.
- கவிஞர் வேமனா தெலுங்குக் கவிஞர் நல்ல சிந்தனையாளர், விலங்கியல்பு படைத்த மனிதனை உயர்த்த முயற்சித்தவர், உருவ வழிபாட்டை எதிர்த்தவர்.
- வங்காளத்தில் பிறந்த இராசாராம் மோகன்ராய் ஆங்கிலம் சமஸ்கிருதம் இந்துஸ்தானி ஆகிய மொழிகளைக் கற்றவர். உடன்கட்டை ஏறும் பழக்கத்தை ஒழிப்பதில் தீவிரப் பங்காற்றியவர்.
- அத்திப்பாக்கம் வேங்கடாசல நாயக்கர் சாதி, மத, சாஸ்திர, புராண, மூடநம்பிக்கைகளையும் மூடச் சடங்குகளையும் கடுமையாக எதிர்த்தவர்.
- சிதம்பரம் இராமலிங்க அடிகளார் சமயச் சீர்திருத்தவாதி.
- சுவாமி தயானந்த சரஸ்வதி ஒரே கடவுள் கோட்பாட்டை வலியுறுத்தினார்.
- கோவிந்தராவ் புலே, ராமகிருஷ்ணர், முனுசாமி நாயக்கர், வீரேசலிங்கம் பந்தலு, நாராயண குரு, விவேகானந்தர், தாமஸ் கோவூர், கோ.ராமச்சந்திரராவ் ஆகியோரும் சமூகச் சீர்திருத்தப் பணிகளில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டு, சமுதாய மேம்பாட்டிற்காகப் பெரிதும் உழைத்த பெருமக்களாவர்.

## 2.6 முக்கியச் சொற்கள்

ஈழுவர் : ஒடுக்கப்பட்டவர், நாடார்

துவையல் பந்தி : சமபந்தி சாப்பாட்டு முறை

இன்சான் : மாந்தன் (இந்தி)

## 2.7 தன்மதிப்பீட்டு விடைகள்

1. தெலுங்கு
2. உடன்கட்டை ஏறும் வழக்கத்தை ஒழித்தது
3. 2.4.4 ஐப் பார்க்கவும்.
4. 2.4.5 ஐப் பார்க்கவும்.